இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No./159/News/2019. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 143 | இதழ் : 09 | திகதி : 19.05.2019 | விலை : 30.00

## பாரபட்சமற்ற விசாரணையினூடாகத் தீவிரவாதிகளை உடன் சட்டத்தின் முன் நிறுத்துங்கள்

### கத்தோலிக்க ஆயர் பேரவை அரசிடம் வேண்டுகோள்




இலங்கை ஆயர்கள் அனைவரும் பற்கேற்ற ஆயர் பேரவையானது கடந்த மே மாதம் 7ம் திகதி முதல் 9ம் திகதி வரை நடைபெற்றது. இப்பேரவைக் கூட்டத்தில் 250 இற்கும் மேற்பட்ட உயிர்களைக் காவு கொண்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்ற மூன்று வாரத்தின் பின்னரான நாட்டின் சமகால நிலை பற்றிக் கலந்தாலோசிக்கப்பட்டது.

இவ் ஆயர் பேரவையின் போது நாட்டின் ஜனாதிபதி உட்பட நாட்டின் அரசியல் தலைவர்களுடனும் பேரவை சந்தித்து உரையாடியது. பேரவையின் இறுதியில் ஒரு ஊடக சந்திப்பில் அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது. இவ் அறிக்கையிலேயே மேற் கூறப்பட்ட வேண்டுகோள் அரசிடம் முன்வைக்கப் பட்டது. அவ் அறிக்கையாவது : சிலுவையில் தமது எதிரிகளையே மன்னித்த இயேசுவின் மிகச் சிறந்த முன்மாதிரிகையைப் பின்பற்றி இம் மிருகத்தனமான தாக்குதலுக்கு இலக்கான நிலையில் இறை மக்கள் நடந்துகொண்ட முறையை எல்லா ஆயர்களும் மீண்டும் பாராட்டி நிற்கின்றனர். ஒரு நாட்டின் மக்கள் என்ற முறையில் நாம் ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ள வேண்டும். மற்றும் ஒவ்வொரு மதத்தின் தனித்துவத்தையும் மதிக்க வேண்டும். மதத்தின் பெயரில் வன்முறைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. நாம் தத்தம் மதங்களை மதிக்கிறோம். எச் சூழ்நிலையிலும் இலங்கைத் தீவில் மத நல்லிணக்கமும் அமைதியுடனான சக வாழ்விற்கான சூழ்நிலையும் என்றும் பாதுகாக்கப்படவேண்டும்.

எதிர்பாராத இப் பேரிழப்பிற்கு பாதுகாப்பு நிலைமையில் தென்பட்ட பாரிய தொய்வு நிலையே காரணம் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. பல உயிர்களைக் காவு கொள்ளக் காரணமாயிருந்த இக் கொடூரத் தாக்குதலின் சூத்திரதாரிகளை விரைவில் இனங்கண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதேவேளை பாரபட்சமற்ற விசாரணையினூடாகத் தீவிரவாத சிந்தனைப் போக்குடன் இத்தாக்குதலுக்கு மூல காரணமான குற்றவாளிகளை உடன் சட்டத்தின் முன் நிறுத்துமாறு இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை அரசாங்கத்திடம் பெரிதும் எதிர்பார்த்துள்ளது. (தொடர்ச்சி 2ம் பக்கம்)

## அகவை நாளில் வாழ்த்தி மகிழ்கின்றோம்



அகவை ஏழு பத்து ஒன்று
கண்ட எங்கள் ஆயனே
தகமையோடு தமிழரெங்கள்
தரமுயர்த்தும் தலைவனே
பகைமை சூழும் புவியிலெம்மை
பாதுகாக்கும் மேய்ப்பனே
இளமையோடு இறைபணியை
என்றும் ஆற்ற வாழ்த்தினோம்
இகமதிலே புகழுயர
இதயமதால் வாழ்த்தினோம்

- "காவலன்" வாசகர்கள் -

## மணியங்குளம் குழந்தை இயேசு ஆலயம் திறப்பு விழா





அக்கராயன் பங்கின் மணியங்குளம் குழந்தை இயேசு ஆலயம் 12.05.2019 அன்று யாழ் மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்விலே யாழ் மாகாண அமல மரித்தியாகிகளின் முதல்வர் அருட்திரு எட்வின் வசந்தராஜா அமதி. யாழ் மறைமாவட்ட நிதியாளர் அருட்பணி நேசன், முன்னை நாள் பங்குத்தந்தையர்கள் ஸ்ரனிஸ்லொஸ் பிலிப்ஸ், அந்தோனிமுத்து. அருட்பணி யூட் அமலதாஸ், அருட்பணி கிளாயர் ஆயரின் செயலர் அருட்சகோதரிகள் இறைமக்கள் கலந்து சிறப்பித்தனர்.யாழ் ஆயர் அவர்களின் நிதியுதவியுடன் பங்குத்தந்தை சுவின் றவல் அடிகளாரின் மேற்பார்வையில் இவ் ஆலயக் கட்டட நிர்மாணப்பணிகள் நிறைவுபெற்றன.

## ஈழப் பெருந்துயரின் 10ம் ஆண்டு நினைவில் தமிழர்



ஈழத்தமிழர் வரலாற்றின் இரத்த சரித்திரம் முள்ளி வாய்க்காலில் எழுதப்பட்ட 10ம் ஆண்டு நினைவு. உணர்வெழுச்சியுடன் 18 மே அன்று முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் நினைவு கூரப்படவுள்ளது. தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள், தமிழினம் சார்ந்த பாதுகாப்பு, உரிமைகள், தீர்வுகள் என்பன இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கின்றன என்பதை யாரும் நிராகரிக்க முடியாது. இனியொரு யுத்தம் நமக்கு வேண்டவே வேண்டாம் என்றாலும் சர்வதேசம் நமக்கான நீதியைப் பெற்றுத்தரும் என்பது எமது நம்பிக்கையும் கூட. இப்போரில் பாதிப்புற்ற அனைவருக்கும் மறுவாழ்வு கிடைக்க வேண்டியும், கொல்லப்பட்ட அனைவருக்கும் ஆத்மசாந்தி வேண்டியும், காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்களின் ஏக்கங்கள் தீரவும் "பாதுகாவலன்" பிரார்த்தித்து நிற்கிறது.

## சில்லாலையில் முதியோர் இல்லம் திறந்துவைப்பு





பிரபல வர்த்தகரும் கொடையாளியுமாகிய A.Y.S ஞானம் அறக்கொடை நிறுவனத்தினரால் சில்லாலையில் அமைக்கப்பட்ட முதியோர் இல்லம் கடந்த மே மாதம் 4ம் திகதி யாழ். ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் திறந்து வைக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டது.

ஏழ்மையிலும், தனிமையிலும், யாருடைய கவனிப்புமின்றித் தவிக்கும் முதியோர்களுக்கு முன்னுரிமை வழங்கும் இவ் இல்லத்தினை அன்புக் கன்னியர் சபை அருட்சகோதரிகள் பொறுப்பேற்று நடாத்துகின்றார்கள்.

## முஸ்லிம்களுக்கு எதிராகக் கத்தோலிக்கத் திருஅவை செயல்படாது

**- பேராயர் கர்தினால் மல்கம்**

முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்படும் அனைத்துப் பழிவாங்கும் தாக்குதல்களுக்கு எதிராய், க்த்தோலிக்கத் திருஅவை செயல்படும் என்று, கொழும்புப் பேராயர், கர்தினால் மல்கம் இரஞ்சித் ஆண்டகை உறுதி கூறியுள்ளார்.

உயிர்ப்பு ஞாயிறன்று கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களுக்குப் பழிவாங்கலாக முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்று வரும் வன் செயல்களுக்கு கத்தோலிக்கத் திருஅவை ஒருபோதும் அனுமதிக்காது என்று கர்தினால் மல்கம் இரஞ்சித் செய்தியாளர் மாநாட்டில் கூறியமை முஸ்லிம் மக்களின் மத்தியில் நம்பிக்கை உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

# எமது எண்ணம்

## மனச்சாட்சியின் வெளிபாடும் காலம் பிந்திய ஞானமும்

இலங்கை அனைத்து மக்களுக்கும் பொதுவான நாடு. அது தனியே பௌத்த மதத்திற்கு மாத்திரம் சொந்தமான நாடு அல்ல. அப்படிக் கூறவும் முடியாதென நிதியமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளார். தற்போதைய அரசாங்கத்தின் மூத்த அமைச்சரொருவர் அதுவும் பௌத்த சமயத்தைச் சேர்ந்த அமைச்சரொருவர் இவ்வாறு கூறியுள்ளமை மனச்சாட்சியின் வெளிப்பாடு. நீண்ட வரலாறு கொண்ட இலங்கைத் தீவில் தமிழ் சிங்கள இன முரண்பாடு 1920 ஆம் ஆண்டு இலங்கைத் தேசிய இயக்கத்தின் பிளவுடன் ஆரம்பித்தது எனலாம். எனினும் இன்று வரை அதற்குப் பின்னால் வந்த சிங்கள அரசியல் தலைவர்கள் சிலர் இனமுரண்பாட்டுக்கான காரணங்களை ஓரளவுக்கேனும் அல்லது ஒப்பாசாரத்துக்கேனும் தெரிந்து கொண்டனர். அல்லது தெரிந்து கொண்டது போல காண்பித்தனர்.

இலங்கையில் சிங்களம் தமிழ் என்ற இரண்டு தேசிய மொழி பேசுகின்ற மக்கள் வாழ்கின்றனர். பௌத்தம், கிறிஸ்தவம், சைவம், இஸ்லாம் என்ற நான்கு சமயங்களைப் பின்பற்றும் மக்கள் வாழ்கின்றனர். ஆகவே இலங்கை பல்லின சமூகம் வாழும் நாடு என்பது கண்கூடு.

இவ்வாறானதொரு நிலையில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் போர் இல்லாதொழிக்கப்பட்ட பின்னரான சூழலில் தமிழர் அரசியல் வேறுதளத்திற்கு மாறியது. தமிழ்த் தலைமைகள் அந்தத் தளத்தை குறிப்பாகச் சர்வதேச மயப்பட்டுள்ள ஈழத் தமிழர் அரசியலை சரியான முறையில் ஒழுங்குபடுத்தவில்லை. இலங்கைத்தீவு நோக்கிய பூகோள அரசியல் என்பது 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன்னரான சூழலில் இருக்கவில்லை. அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகள் அவ்வப்போது இலங்கைக்கு உதவிபுரிந்திருந்தாலும் இலங்கையில் கால்பதித்து ஆதிக்கம் செலுத்தும் நிலையை அந்தச் சூழல் ஏற்படுத்தவில்லை.

இந்த நாடுகளின் உதவியோடு ஈழத்தமிழரின் ஆயுதப் போராட்டம் ஏன் அழிக்கப்பட்டது என்பதை அரசியல் ஆய்வாளர்கள் பலர் கூறியுள்ளனர். குறிப்பாக இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் தமது ஆதிக்கத்தைச் செலுத்த வேண்டுமென அமெரிக்கா, இந்திய மத்திய அரசின் ஆசீர்வாதத்துடன் இலங்கை மீது நாட்டம் கொண்டிருந்தது. ஆனால் இலங்கைத் தீவில் நடக்கும் போர் அதற்கு ஆபத்தானது என்ற அடிப்படையில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் ஈழப்போராட்டம் இல்லாதொழிக்கப்பட்டது.

அத்துடன் விடுதலை வேண்டிப் போராடும் தேசிய இனங்களின் ஆயுதப் போராட்டம் நியாயமானது என்ற கருத்தை உலக அளவில் நியாயப்படுத்திவிடக் கூடாதென்பதும் அமெரிக்கா போன்ற நாடுகளின் மற்றுமொரு நோக்கமாகவும் இருந்தது. அதற்காகவே ஈழத்தமிழரின் போரை இல்லாதொழித்து உலகத்துக்கு உதாரணம் காண்பிக்கப்பட்டது. அதாவது மரபுவழி இராணுவத்தைக் கொண்ட பலமிக்க விடுதலை இயக்கம் ஒன்று இலங்கையில் அழிக்கப்பட்டுள்ளது என்ற செய்தி உலகில் உள்ள ஏனைய இயக்கங்களுக்குப் பாடமாக அமைய வேண்டும் என்பது அதன் உள்நோக்கமாக இருந்தது.

2001 ஆம் ஆண்டு பின்லேடன் அமெரிக்காவில் நடத்திய தாக்குதலின் பின்னர், இவ்வாறன சிந்தனை மேற்குலக நாடுகளுக்கு ஏற்பட்டது. ஆனாலும் ஈழத்தமிழர் போராட்டம், இஸ்லாமியவாதிகளின் போராட்டம் போன்றதல்ல. அது விடுதலைப் போராட்டமென்று அமெரிக்கா போன்ற மேற்குலகத்துக்கு நன்கு தெரியும். எனினும் பயங்கரவாதம் என்ற போர்வையில் உலகளாவிய இயக்கங்களுக்கு விதிக்கப்பட்ட தடைக்கு ஈழத்தமிழரின் ஆயுதப்போராட்டமும் விதிவிலக்கல்ல என்ற நிலையை ஏற்படுத்திவிட்டது. ஆனாலும் 2009 ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்காலில் ஏற்பட்ட மிகமோசமான தமிழ் இன அழிப்புக்கு மேற்குலம் ஆதரவல்ல. எனினும் அதன் பின்னரான சூழலில் தமிழ்த் தலைமைகள் சரியான புரிதலை ஜனநாயக வழியில் உலகத்துக்குக் கொடுக்கவில்லை. ஐஎஸ் இஸ்லாமியவாதிகள் உயிர்த்த ஞாயிறன்று நடத்திய தாக்குதலின் பின்னரான தமிழரின் நிலை தொடர்பாகக் கூடவேனும் சரியான புரிதல் இல்லை.

தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் அனேகர் தமிழ்க் கிறிஸ்தவ மக்கள். சிங்களக் கிறிஸ்தவர்கள் அதிகளவில் பாதிக்கப்படவில்லை. இந்த நிலையில் தென்பகுதியில் முஸ்லிம் மக்கள் மீது பௌத்த சிங்கள மக்கள் ஏன் தாக்குதல் நடத்த வேண்டும்? பாதிக்கப்பட்ட தமிழர்கள் எவரும் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தவில்லையே? 30 வருட போரின் வலியைக் கண்ட மக்கள் மற்றுமொரு சமூகம் தாக்கப்படுவதை அனுமதிக்க விரும்பாது. பூகோள அரசியல் போட்டிக்குள் தற்போது சிக்குண்டுள்ள இலங்கை மக்கள், 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன்னர் ஈழப் போரின் மத்தியிலும் எப்படியான வாழ்க்கையை வாழ்ந்தார்கள் என்பது பற்றி சிங்கள அரசியல் தலைவர்கள் சிலர் தற்போது கூற ஆரம்பித்துவிட்டனர்.

இது மனச்சாட்சியின் வெளிப்பாடு மாத்திரமல்ல. பத்தாண்டு நிறைவில் பட்டறிவின் காலம் பிந்திய ஞானமும் கூட. விடுலைப் போராட்டத்திற்கும் பயங்கரவாதத்திற்கும் இடையேயான வேறுபாடுகளை 2001 ஆம் ஆண்டு அமெரிக்கத் தாக்குதல் நடந்த பின்னர் சீர்தூக்கிப் பார்த்திருந்தால், இலங்கை மாத்திரமல்ல இலங்கையில் கால்பதிக்கத் துடிக்கும் மேற்குலகமும் நிம்மதியடைந்திருக்கலாம்.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

## செம்பியன்பற்று புனித பிலிப்புநேரியார் திருத்தல பெருவிழா

செம்பியன்பற்று புனித பிலிப்புநேரியார் திருத்தலப் பெருவிழா இவ்வாண்டு மே மாதம் 25ம் திகதி (சனிக்கிழமை) நடைபெறும். காலை 6.00 மணிக்குத் திருச்செபமாலையோடு திருவிழாத் திருப்பலியும் நற்கருணை வழிபாடானது முன்னைய நாள் 24ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கும் நடைபெறும். திருவிழாவுக்குச் செல்லவுள்ள யாத்திரிகர்களுக்கான பயண ஒழுங்குகள் யாழ்ப்பாண, பருத்தித்துறை பஸ்நிலையங்களிலிருந்து போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதென பங்குத்தந்தை அருட்பணி J.B.ஜோதிநாதன் அடிகளார் பாதுகாவலனுக்குத் தெரிவித்தார்.

## திருத்தந்தையின் தர்மப்பணிகள்

திருத்தந்தையின் தர்மப்பணித் துறை, 2018ம் ஆண்டு, 35 இலட்சம் யூரோக்கள், அதாவது, 58 கோடி இலங்கை ரூபாய் பெறுமதியான நிதி உதவியை வறியோருக்கு வழங்கியுள்ளது

வத்திக்கான் செய்தித்துறை வெளியிட்ட ஒரு கட்டுரையில், வறியோருக்கு துவக்கத்திலிருந்து உதவிகள் செய்துவந்துள்ள திருஅவையைக் குறித்து பல்வேறுவரலாற்றுக்குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

வறியோரின் வீட்டு வாடகை, மின் கட்டணம், மருத்துவத் தேவைகள் ஆகிய பல்வேறு காரணங்களுக்காகத் திருத்தந்தையின் பெயரால் நிதி உதவியை வழங்கும் பொறுப்பு, தற்போது கர்தினால் Konrad Krajewski அவர்களைச் சார்ந்தது.

பொதுவாக உலகெங்கிலும் உள்ள பங்கு அருட்பணியாளர்கள், தங்கள் பங்கிலுள்ள வறியோரின் தேவைகளை உணர்த்தும் மடல்களை, திருத்தந்தையின் தர்மப்பணிகள் துறைக்கு அனுப்பி வைக்க, இத்துறையிலிருந்து, பங்குஅருள்பணியாளர்கள் வழியே, இந்த உதவிகள் செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு நாளும் அமைதியாக நடை பெறும் திருத்தந்தையின் தர்மப்பணிகள், வறியோரின் உணவு, மருத்துவச் செலவு, அவர்கள் தங்குமிடம் ஆகிய பல்வேறு நோக்கங்களுக்காகச் செயலாற்றிவருகின்றன.

**புதிய திருப்பலிப் புத்தகங்கள் விற்பனைக்கு**

புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் புதிய திருப்பலிப் புத்தகங்கள், திருப்பலி வாசகப் புத்தகங்கள், வேதாகமம், இறையியல் ஆன்மீகப் புத்தகங்கள் என்பன விற்பனைக்குண்டு.

## துயர் பகிர்கிறோம்



யாழ். மறைக்கல்வி நிலையம், யாழ் ஆயர் இல்லம் என்பவற்றில் 27 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றிய செல்வி ஐயாத்துரைசூசைப்பிள்ளை இராஜேஸ்வரி அவர்கள் இவ்வாரம் இறைவனடி சேர்ந்தார். அவருடைய ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடுகின்றோம். அமரர் (செல்வி). ஐயாத்துரை சூசைப்பிள்ளை இராஜேஸ்வரி அவர்கள் அமரர். அருட்பணி.ஜி.ரி.பாலசுந்தரம் அடிகளாருடைய காலத்திலிருந்து ஊடகத்துறை வளர்ச்சியடையாத நிலையிலும் யாழ். மறைக்கல்வி நிலையத்தில் அனைத்து மறைக்கல்வி, கல்வி சார்பான அனைத்து அச்சுப்பிரதிகளையும், தனித்து தட்டச்சுச் செய்து பல சிரமங்கள் மத்தியில் தியாக உணர்வோடு பணியாற்றினார்.

அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் இவரது குடும்பத்தினருக்கு யாழ் மறைக்கல்வி நடு நிலைய இயக்குனர், பணியாளர்கள் சார்பிலும் யாழ் மறைமாவட்ட ஆயர், குருக்கள் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

## உலக குடும்ப நாளில் திருத்தந்தையின் செய்தி

மே 15 குடும்பங்களின் உலக நாள் கொண்டாடப்பட்டதையொட்டி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குடும்பங்களை மையப்படுத்தி செய்தியை வெளியிட்டார்.

"ஒவ்வொரு தனி மனிதருக்கும், படைப்பு அனைத்திற்கும் வழங்கப்படும் அக்கறை, குடும்பத்தின் முன்னேற்றம் என்ற கருத்தை வளர்ப்பதன் பொருள்" என்ற சொற்களை,த் திருத்தந்தை பதிவு செய்திருந்தார்.

மே 15 குடும்பங்களின் உலக நாள் சிறப்பிக்கப்பட்டதையும் குடும்பங்கள் மற்றும் படைப்பின் பாதுகாப்பு என்பது இவ்வாண்டு சிறப்பிக்கப்பட்ட உலக நாளுக்கு மையப்பொருளாக அமைந்தது என்பதையும் திருத்தந்தை குறிப்பிட்டுப் பேசினார்.


## பாரபட்சமற்ற விசாரணை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)


நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்த பாதுகாப்புப் படையினரதும் பொலிஸாரினதும் அர்பண முள்ள பணியை நாம் பாராட்டுகின்றோம். இம் முயற்சியானது மக்கள் மத்தியில் சுமூக நிலை ஏற்படும் மட்டும் தொடரப்படவேண்டும். மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படின் அவர்கள் மத்தியில் இயல்பு நிலை ஏற்படாது. எமது இக் கூட்டத்தொடரின் போது நாட்டின் எல்லாத் தலைவர்களையும் சந்தித்து எமது சமூகத்தை கவ்வியுள்ள பயப் பீதி உணர்வை போக்குவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளோம். மதம், சாதி, நிறம் என்பவற்றைக் கடந்து முழு நாட்டிற்கும் ஒரே ஒரு சட்டக்கோவையே இருக்க வேண்டும். உண்மையையும் நீதியையும் மீட்டெடுக்கும் போது தான் மக்கள் உண்மையான அமைதியையும், சுதந்திரத்தையும் அனுபவிப்பார்கள்.

அரசியல் வேறுபாடுகளையும் சுயநலங்களையும் மறந்து எம் மக்களையும் நாட்டையும் பற்றிச் சிந்திக்க வேண்டிய நேரம் இதுவாகும். இருள் சூழ்ந்த எம் தேசத்தின் இந்நிலையில் துன்பப்படும் மக்களுக்காகவும் எம் நாட்டிற்காகவும் நல்மனம் கொண்ட எல்லோரையும் இறைவனிடம் மன்றாடுமாறு வேண்டி நிற்கின்றோம். நமது பிரியமான தேசத்தில் நல்லிணக்கம், அமைதி மற்றும் ஒற்றுமைக்கான வழி பிறக்க சக மதத்தலைவர்களுடன் நாம் கைகோர்த்து நீதி வேண்டியுள்ளோம். இவ் அறிக்கையானது கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் பேரருட்திரு. வின்சன் பெர்னான்டோ SSS ஆண்டகை அவர்களும் பொதுச் செயலர் பேரருட்திரு. வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை அவர்களும் ஒப்பமிட்டு வெளியிட்டிருந்தனர்.

## சிந்திக்கச் சித்திரம்



# மந்தை வாசம் அறிந்த ஆயன்



எல்லா மனிதர்களும் வரலாற்றில் வாழ்ந்துவிட்டுப் போகிறார்கள். ஒரு சில மனிதர்கள் மட்டுமே வரலாறாய் வாழ்ந்து விடுகிறார்கள். மண்ணுக்குள் மூச்சடங்கிப் புதைந்து கிடந்து வலிதாங்கத் தயாரான மனிதர்கள் வைரங்களாக முளைத்து விடுகிறார்கள்.

*"தோன்றிற் புகழோடு தோன்றுக அன்றேல் தோன்றாமை நன்று"*

அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, யாழ் ஆயர், ஓர் வரலாறு. ஒருநிகழ்காலச் சரித்திரம். ஒரு தேர் ஊருக்குள் நடந்து போன தடங்கள் போல இவரின் வாழ்வின் சுவடுகளைத் தேடுவது ஓர் அழகான அனுபவம். 13-05-1948 எம் ஆயர் அவர்கள் பூமியைத் தன் இலட்சிய விழிகளால் வியந்து பார்த்த பிறந்தநாள். வரலாறு இந்தநாளை இரகசியமாய் நெஞ்சிலே பச்சை குத்திக்கொண்டது. சத்தியமாய் 1948இல் யாருமே கனவு

> எம் மண்ணில்
> மையம் கொண்ட
> மழையே!
> எம் மனசில்
> கூடுகட்டிய
> தூக்கணாங்குருவியே
> எம்
> அன்பு ஆயரே!
> இனிய பிறந்த தினமதில்
> இதயம் நிறைந்து
> வாழ்த்துகிறோம்

கண்டிருக்க மாட்டார்கள். 2019இல் Google தேடலில் Justin Gnanapragasam என்று எழுதினால் உலகத்தின் எல்லாக் கண்டத்திலும் இவரின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கமுடியும் என்ற உண்மையை. கரம்பொன் என்று சின்னக் கிராமத்தில் விழுந்த விதை இன்று ஆயிரம் விழுது இறக்கிய ஆலமரமாக உலகின் திசைகளெங்கும் விரிந்து நிற்கிறது.

*"ஈன்ற போது பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்"*

என் தாய்மண் இதயம் நிறைந்து மகிழ்கிறது. ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரிக்கு விளையும் பயிரை முளையிலேயே தெரிந்திருந்தது. தன்னில் துளியென விழுந்தவன் நதியாகி நடந்தவன் அறிவுக் கடலாக, ஆகிய அதிசயம் கண்டு கல்லூரி அன்னை மார் தட்டிக்கொண்டாள்.

புனித மடுத்தீனார் குருமடம் இருகரம் நீட்டி இவரை வரவேற்றுக்கொண்டது. இது நாற்றுமேடை. சார்ள்ஸ் டார்வினின், "தகுதியுடையவை தப்பிப்பிளைக்கும்" என்ற கோட்பாடு இங்கு மிகப் பொருத்தமானது. இவர் ஒரு சின்னத் தீக்குஞ்சு.

**அருட்பணி எஸ்.அஜந்தன்**

**"அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்.**
**அதை அங்கொரு காட்டிலோர்**
**பொந்திடை வைத்தேன்**
**வெந்து தணிந்தது காடு - தழல்**
**வீரத்தில் குஞ்சென்றும்**
**மூப்பென்றும் உண்டோ?"**

ஒரு தீக்குஞ்சு சூரியச் சுடராகி விட்டது. இந்த அக்கினியின் அருகே இன்று அகிலம் அமர்ந்து ஆனந்தமாய் குளிர்காய்ந்து கொள்கிறது. மெய்யியலை கண்டி தேசிய குருமடத்தில் கற்றார். இறையியலை இந்தியாவில் பூனே குருமடத்தில் கற்றார்.

இரத்தம் ஒழுகும் சிலுவையைத் தூக்கிக்கொண்டு நடக்கும் இயேசுவின்சீடனாகி குருத்துவத்துக்குள் புகுந்தார். குருத்துவப் பணியில் பல நெருப்பாறுகளை நீந்திக்கடந்தார் இருந்தும்உருகிவிடாது இருந்தார்.

"இராயப்பா நீ என்னை அன்பு செய்கிறாயா? அப்படியானால் என் ஆடுகளை மேய்" என்ற ஆயத்துவப் பணியின் குரல்கேட்டு 2015ம் ஆண்டு பழம்பெரும் விசுவாசப் பாரம்பரியம் கொண்ட யாழ். மறைமாவட்டத்தின் ஆயராக அபிஷேகம் பெற்றார்.

"நாய்கள் குரைத்துக்கொண்டே இருந்தன. ஒட்டகம் நடந்து கொண்டே இருந்தது" என்ற அரேபியப் பழமொழிக்கேற்ப எதிர்ப்புக்கள் பலதாண்டி இலக்கு நோக்கி தெளிவாக நடப்பவர். பாதையில் கிடக்கும் சாணங்களால் என் பயணங்கள் அழுக்காகி விடுவதில்லை என்று வாழ்வை அழகாக வாழ்கின்றவர்

"நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே" என்று பேசும் நக்கீரன் வழித் தோன்றலாய் நீதியின் குரலாய் ஒலித்துக் கொண்டே இருப்பவர். ஆடுகளின் மணம் அறிந்த ஆயனாக அவர்களின் வாழ்வின் புழுதித் தெருக்களை நோக்கி நடந்து கொண்டே இருப்பவர்.

வெள்ளம் வீடுபுகுந்து விட அநாதைத் தெருக்களிலே ஆயனின்றி அலைந்த ஆடுகளைத் தேடிச் சென்று உணவு கொடுத்து அவர்களின் ஆடைகளில் ஒட்டிக் கிடந்த ஈரச் சேற்றின் வாசம் அறிந்தவர்.

இறையாட்சி என்ற இயேசுவின் நீளக்கனவை நிஜமாக்கிட பேதங்கள் அற்ற சமத்துவ சமுதாயக் கனவுக்காக உழைப்பவர்.

உலகின் வலிமையான சொல் "செயல்" என்பதில் உறுதியானவர். அதிகம் பேசிக்கொண்டிருக்காமல் செய்துவிட்டு சொல்பவர்.



# கிறிஸ்தவமல்லா சமயங்களைப் பின்பற்றும் மக்கள் பற்றி திரு அவை கூறுவதை அறிந்துகொள்வோம்

**குரு முதல்வர் ப.யோ.ஜெபரட்ணம் அடிகள்**

மதங்களுக்கிடையே பாரிய இடைவெளிகளை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகள் அண்மைக் காலங்களாக அதிகரித்து வருகின்ற இக்காலகட்டத்தில் எமது கத்தோலிக்க திரு அவை கிறிஸ்தவமல்லாச் சமயங்களோடு நாம் கொள்ளவேண்டிய உறவைப்பற்றி எமக்குக் கூறும் படிப்பினைகளை நாம் அறிந்துகொள்வது அவசியமாகும். ஒவ்வொருவரும் தமது மதத்தை அன்பு செய்ய வேண்டுமேயொழிய மதவெறி கொள்ளக் கூடாது. தனது மதத்தை அன்புசெய்பவர் மற்றைய மதங்களையும் அதன் மக்களையும் அன்பு செய்வார். தனது மதத்தில் வெறிகொண்டவர் தன்னையும் அழித்து அடுத்தவரையும் அழித்துக்கொள்வார். எனவே, கிறிஸ்தவர்களாகிய நாம் எமது கிறிஸ்தவத்தை எவ்வாறு அன்பு செய்து ஏனைய மதங்களையும் மக்களையும் வாழவைக்கவேண்டும் என்பதைத் திரு அவை எமக்குத் தெளியாகச் சொல்லித் தருகிறது.

**வெறுத்து ஒதுக்கவில்லை**

கிறிஸ்தவமல்லாச் சமயங்களோடு திரு அவை தனது உறவுபற்றி அதிக கவனத்துடன் ஆய்ந்து வருகிறது. இச்சமயங்களிலே காணக்கிடக்கின்ற உண்மையானதும் தூயதுமான எதையுமே கத்தோலிக்கத் திருஅவை வெறுத்து ஒதுக்கவில்லை. தன்னுடைய கொள்கைகளிலிருந்தும் போதனைகளிலிருந்தும் பலவற்றில் மாறுபடினும் எல்லா மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையின் ஒளிச்சுடரை மீண்டும் மீண்டும் பிரதிபலிக்கின்ற செயல்முறைப் பாணிகள், வாழ்க்கை முறைகள், நெறிகள், கோட்பாடுகள் ஆகிவற்றைக் கத்தோலிக்க திருஅவை உண்மையாகவே மதித்துப் போற்றுகின்றது.

மக்கள் அனைவரும் ஒரே சமூகத்தைச் சார்ந்தவர்களே. மண்ணில் வாழ்வதற்கென்றே மனுக்குலம் முழுவதையும் கடவுள் படைத்தார் என்பதால் மனிதர் அனைவருக்கும் பிறப்பிடம் ஒன்றே. அவர்களது இறுதிக் கதியாகிய கடவுள் ஒருவரே. தேர்ந்து கொள்ளப்பட்ட யாவரும் இறைமாட்சியால் ஒளிர்விருக்கும் திருநகரத்தில் ஒன்று சேர்க்கப்பட்டு எல்லா மக்கள் குழுவினரும் அங்கு இறையொளியில் நடக்கும் காலம் வரை கடவுளின் பாதுகாப்பும், அவர் புரியும் நன்மைகளின் வெளிச்சான்றும் நிறைவாழ்வு வழங்க அவர் வகுத்த திட்டங்களும் எல்லா மனிதரையும் சென்றடைகின்றன.

முற்காலத்தில் மட்டுமன்றி இக்காலத்திலும் மனித நிலைபற்றிய புரியாப் புதிர்கள் மனித உள்ளங்களைக் கலக்கி வருகின்றன. இவற்றிற்கான விடையை மனிதர்கள் பல்வேறு சமயங்களிலிருந்து எதிர்பார்க்கின்றனர். இப்புதிர்களாவன: மனிதர் என்றால் யார்? மனித வாழ்வின் நோக்கமும் பொருளும் என்ன? நன்மை என்றால் என்ன? பாவம் என்பது என்ன? துன்பத்தின் பிறப்பிடம் யாது? அதன் நோக்கம் என்ன? உண்மையான மகிழ்ச்சியை அடையும் வழி என்ன? இறப்பு, அதன்பின் தீர்ப்பு, இறப்புக்குப்பின் வினைப்பயனளித்தல் ஆகியவற்றின் உண்மை என்ன? நாம் எங்கிருந்து வருகிறோம், எங்கு செல்கிறோம்?

**கிறிஸ்தவமல்லாப் பல்வேறு சமயங்கள்**

பண்டைக் காலத்திலிருந்து இன்றைய காலம் வரை இயற்கையின் போக்கிலும், மனித வாழ்வின் நிகழ்ச்சிகளிலும் மறைந்திருக்கும் ஓர் ஆற்றலைப் பல்வேறு மக்கள் உணர்ந்துள்ளனர். ஏன், சில நேரங்களில் ஒப்புயர்வற்றதொரு கடவுளைத் தந்தையாகவும் மக்கள் கண்டு ஏற்று வந்துள்ளனர். மேற்கூறிய உணர்வும் ஏற்பும் அவர்களது வாழ்வை ஆழ்ந்த சமய உணர்வில் தோய்ந்திருக்கச் செய்கின்றன. முன்னேறிய பண்பாடுகளோடு பிணைந்த சமயங்கள் இதே வினாக்களுக்கு அதிக நுட்பம் வாய்ந்த கருத்துக்களாலும் அதிக வளர்ச்சியுற்ற சொல் முறையாலும் விடையளிக்க கடும் முயற்சி எடுத்துள்ளன.

**இந்து சமயம்**

இவ்வாறு இந்து சமயத்திலே மக்கள் கடவுளின் மறைபொருளை ஆய்கின்றனர். அதனை அவர்கள் வற்றா வளமுடைய புராணங்களாலும் ஆழ்ந்த மெய்யியல் ஆராய்ச்சிகளாலும் எடுத்துரைக்கின்றனர். தவவாழ்க்கை, ஆழந்த தியானம், அன்போடும் நம்பிக்கையோடும் கடவுளை நாடுதல் போன்ற வழிகளைப் பயன்படுத்தி மனித நிலைசார்ந்த துயரங்களிலிருந்து விடுதலை தேடுகின்றனர்.

**புத்த சமயம்**

புத்த சமயம் தன் பற்பல வடிவங்களிலே மாற்றங்களுக்கு உட்பட்ட இந்த உலகத்தின் அடிப்படையான நிறைவற்ற நிலையைச் சுட்டிக் காட்டுகிறது. மேலும் மக்கள் பக்தியும் நம்பிக்கையும் கொண்ட உள்ளத்தோடு முழுமையான விடுதலை பெறுவதற்கோ, தங்களது சொந்த முயற்சியால் அல்லது மேலிருந்து வரும் உதவியால் முழுமையான உள்ளொளியைப் பெறுவதற்கோ சாதகமான வழியைப் புத்த சமயம் கற்பிக்கிறது.

**இஸ்லாமிய சமயம்**

வாழ்பவரும், தாமாக இருப்பவரும், இரக்கமும் வல்லமையும் மிக்கவரும், விண்ணையும் மண்ணையும் படைத்தவரும், மக்களிடத்தில் பேசியவருமான ஒரே கடவுளைத் தொழுகின்ற இஸ்லாமிய மக்களுக்குத் திருச்சபை சிறந்த மதிப்பு அளிக்கிறது.

இஸ்லாமிய சமயம் தன்னைத்தானே ஆபிரகாமுடன் விருப்போடு இணைத்துக் கொள்கிறது. அவர் கடவுளுக்கு அடிபணிந்ததுபோல இஸ்லாமியர்களும் கடவுளது மறைவான திட்டங்களுக்கு முழு உள்ளத்தோடு அடிபணிந்திட முயற்சி எடுக்கிறார்கள். இயேசுவை அவர்கள் கடவுளாக ஏற்றுக் கொள்ளாவிட்டாலும்கூட, அவரை ஓர் இறைவாக்கினராக ஏற்று வணக்கம் செலுத்துகிறார்கள். அவருடைய கன்னித் தாயாகிய மரியாவையும் பெருமைப்படுத்துகிறார்கள். சிலவேளைகளிலே அவர்கள் பக்தியோடு அவரிடம் வேண்டவும் செய்கிறார்கள்.

இன்னும், உயிர்ப்பிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் கடவுள் அவர்களுக்குரிய பயனை அளிக்கும் தீர்ப்பு நாளை இஸ்லாமியர் எதிர்நோக்கியிருக்கிறார்கள். எனவே, அவர்கள் ஒழுக்க வாழ்வை மதிப்பதோடு சிறப்பாக இறைவேண்டல், ஈகை, நோன்பு ஆகியவற்றின் வழியாகக் கடவுளை வழிபடுகிறார்கள்.

காலப்போக்கிலே கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையே பற்பல கருத்து வேறுபாடுகளும் பகைமைகளும் ஏற்பட்டது உண்மையே. இருப்பினும், கடந்தவற்றை மறந்து, இருதிறத்தாரும் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்வதற்காக நேர்மையுடன் ஈடுபடவும், எல்லா மனிதருடையவும் நன்மைக்காகச் சமூக நீதி, ஒழுக்க நலன்கள், அமைதி, சுதந்திரம் ஆகியவற்றைப் பேணிக் காத்து மேம்படுத்துவதில் ஒத்துழைக்கவும் திரு அவை அழைப்பு விடுக்கிறது.

**அன்புடனும் முன்மதியுடனும் அணுகுங்கள்**

இவ்வாறு, கத்தோலிக்க திரு அவை தன் மக்களுக்கு அறிவுறுத்துவது என்னவென்றால் கிறிஸ்தவர்கள் தம் நம்பிக்கைக்கும் வாழ்விற்கும் சான்று பகருங்கால், கிறிஸ்தவமல்லாச் சமயங்களைப் பின்பற்றுபவர்களோடும் முன்மதியுடனும் அன்புடனும் உரையாடல் நிகழ்த்தவேண்டும். அவ்வாறே அவர்களோடு ஒத்துழைக்க வேண்டும். மேலும் கிறிஸ்தவமல்லாச் சமயங்களைப் பின்பற்றுபவர்களிடத்தில் காணப்படுகின்ற அருள்நெறி மற்றும் அறநெறி சார்ந்த நலன்களையும் சமூக-பண்பாட்டு விழுமியங்களையும் ஏற்றுக்கொண்டு அவற்றைப் பேணி வளர்ச்சியுறச் செய்ய வேண்டும்.

எனவே, மனிதருடைய மாண்பையும் அதன்வழி பிறக்கின்ற உரிமைகளையும் பொறுத்தமட்டில் ஒரு மனிதரிடமிருந்து இன்னொரு மனிதரையோ, ஓர் இனத்திலிருந்து இன்னோர் இனத்தையோ அநீதியாகப் பிரித்துப் பேசும் எந்தக் கொள்கையும் செயல்முறையும் அடிப்படையற்றவை.

இக்காரணத்தை முன்னிட்டு,

(தொடர்ச்சி..... 11ம் பக்கம்)

சிறுகதை

# தோற்றுப் போனவர்கள்

கே.ஆர்.டேவிட்



பரலோகத்தை நிர்வகிக்கின்ற பரலோக சபையில் பிரச்சினைகள் இருப்பதில்லை. அதனால் பரலோகசபை கூட்டப்படுவதில்லை. 'பிதா' இவர்தான் பரலோக இராட்சியத்தைப் பல நூற்றாண்டு காலமாகப் பரிபாலித்து வருபவர். இதுவரை காலத்தில் இவரைப்பற்றி எந்த முறைப்பாடுகளும் எழுந்ததில்லை. இன்று அந்தப் பரலோக சபை கூட்டப்பட்டுள்ளது. பரலோக இராட்சியத்தின் பிதா தனது ஆசனத்தில் அமர்ந்திருக்கின்றார்.

அவருக்கு முன்னால் வலது பக்கமாகவும், இடது பக்கமாகவும் நீளத்துக்குப் போடப்பட்டுள்ள ஆசனங்களில் மந்திரி, பிரதானிகள் அமர்ந்திருக்கின்றனர். எல்லோருடைய முகங்களிலும் கேள்விக்குறி இதுவரை காலமும் கூட்டப்படாத பரலோக இராச்சியம் இன்று கூட்டப்படுவதற்கான காரணமென்ன என்றகேள்விஎல்லோரும் பிதாவின் முகத்தையே பார்க்கின்றனர். பிதாவின் முகத்திலும் திருப்தி இல்லை..! சபையில் பெரும் அமைதி...! பூலோகத்தில் பிறந்து வாழ்ந்து மரணிப்பவர்களின் உயிர்கள் மட்டும் இப்பரலோகத்தை வந்தடைகின்றன. இந்த உயிர்கள் பூலோகத்தில் வாழ்ந்த போது கட்டிக் கொண்ட பாவங்களை விசாரித்து அவைகளை வகைப்படுத்தி தண்டனைகள் வழங்கப்படுகின்றன. பூலோகத்திலிருந்து இங்கு வருபவர்கள் திரும்பவும் பூலோகத்திற்கு செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. இவர்களுக்கு பரலோகத்தில் சமதர்மம் நிறைந்த நித்திய வாழ்வுண்டு. பரலோகத்தில் அதர்மங்கள் நிகழ்வதில்லை. அதனால் பரலோக சபை கூட்டப்படுவதற்கான அவசியம் ஏற்படுவதில்லை.

இன்று அந்தச்சபை கூட்டப்பட்டுள்ளது. "பிதாவே.. பரலோகத்தில் அதர்மங்கள் நடப்பதில்லை. அதனால் பரலோக சபை கூட்டப்படுவதில்லை இன்று அவசரமாக இச்சபையைக்கூட்டியுள்ளீர்கள். பரலோகத்தில் என்றும் இல்லாதவாறு இன்று ஏதோ அதர்மம் நடந்துவிட்டதாகவே நாங்கள் கருதுகின்றோம்" மந்திரி பிரதானிகளுக்குப் பொறுப்பான பிரதமகுரு எழுந்து கூறுகிறார்.

இங்கு ஒலிபரப்புச்சாதனங்கள் எதுவும் பொருத்தப்படவில்லை. ஆனால் பிரதம குருவின் பேச்சு மிகத்தெளிவாக ஒலிக்கிறது. சபையில் இருக்கின்ற அனைவரது மனங்களிலும் பிதா என்ன கூறப்போகின்றார் என்ற ஆவலில் பிதாவின் முகத்தையே பார்க்கின்றனர். இங்கு மின்சார சாதனங்கள் எதுவும் பொருத்தப்படவில்லை ஆனால் சபை நடக்கும் இடம் மிகப்பிரகாசமாகவே இருக்கின்றது. "எங்களுடைய பரலோக இராச்சியம் வழமை போல நீதியாகவும் அமைதியாகவும் இருக்கின்றது. ஆனால் பூலோகத்திலிருந்து வருபவர்கள் கூறுகின்ற செய்திகள் மனதுக்கு மிக வேதனையாக இருக்கின்றது" பிதா கேள்விக்குறியோடு தனது பேச்சை முடிக்கிறார்.

"பிதாவே கூறுவதை விளக்கமாகக் கூறுங்கள்" பிரதம குரு மிகப்பணிவோடு கேட்கின்றார். "பரலோகத்தில் இருக்கின்ற நரகலோகத்தை விட பூலோகம் நரகமாக மாறிவிட்டது. இதை நீடிக்க விடக்கூடாது பூலோகத்தில் நடக்கின்ற கொடுமைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்" பிதா மிகவும் வேதனையோடு கூறுகின்றார். "பிதாவே நீங்கள் இப்படி என்றுமே வருத்தப்பட்டுக்கொண்டதில்லை. பூலோகத்தில் அதர்மம் கட்டுமீறிவிட்டதை உணர்கிறேன். இதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கருதுகிறீர்கள்"

"பூலோகத்து அதர்ம நடவடிக்கைகள் பற்றி ஆலோசிக்கவும் அவ்விடயம் தொடர்பான முடிவுகளை எடுப்பதற்காகவுமே உங்கள் அனைவரையும் அழைத்துள்ளேன். எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி நீங்கள் தான் முடி வெடுக்க வேண்டும்" பிதா மிகவும் பொறுப்புணர்வோடு பேசுகிறார்.

"பிதாவே அடியேன் ஒரு கருத்தைக்கூற விரும்புகிறேன்" ஒரு பிரதானி எழுந்து கூறுகிறார். "நாங்கள் எல்லோருமே தர்மத்தைப்பற்றிச் சிந்திப்பவர்கள்.. உங்கள் ஆலோசனையைக் கூறுங்கள்" பிதா மனப்பூர்வாக அனுமதி வழங்குகிறார். "முதலில் நம்மில் சிலர் பூலோகத்துக்குச் சென்று பூலோகத்தின் நடவடிக்கைகளை சேகரிக்க வேண்டும். நமது நேரடியான அவதானத்தின் பின்னரே எடுக்கப் படவேண்டிய நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதே சரியானதாக இருக்குமென எண்ணுகிறேன்" அந்தப் பிரதானி மிக நிதானமாகத் தன் அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகிறார்.

"மிகவும் அருமையான திட்டம் உங்களுடைய ஆலோசனையை நான் பெரிதும் பாராட்டுகிறேன். பூலோகத்தின் அதர்ம நடவடிக்கைகளை நேரடியாகத் தெரிந்து கொண்ட பின்னர் அதைப்பற்றி முடிவெடுப்பதுதான் மிகச்சரியானது" அந்தப் பிரதானியின் அபிப்பிராயத்தை பிதா வெகுவாகப் பாராட்டிப் பேசுகின்றார். "பிதாவே... பரலோகத்திலிருந்து ஒரு குழுவை பூலோகத்துக்கு அனுப்ப வேண்டுமென்பதில் எனக்கு எந்தவித ஆட்சேபனைகளும் இல்லை. ஆனால் குழுவை அனுப்புவதற்கு முதல் ஒரு விடயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும் பரலோகவாசிகள் சூதுவாது தெரியாதவர்கள் அவர்கள் எதையும் நல்லமனத்துடனேயே பார்ப்பார்கள். இவர்களால் பூலோகத்தில் உள்ள சூதுவாதுகளைப் புரிந்து கொள்ளமுடியாது. முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும். அதனால் அரசியல் சூதுவாதில் கைதேர்ந்தவர்களைத் தெரிவு செய்து பூலோகத்துக்கு அனுப்பினால்தான் பூலோகத்திலிருந்து சரியான தகவல்களைப் பெறமுடியும்" என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம் அடக்கத்தோடு வெளிப்படுத்துகின்றார்.

"நீங்கள் சொல்வதில் நிறைய நியாயங்கள் உண்டு.. ஆனால் பரலோக வாசிகள் அனைவருமே சூதுவாது தெரியாதவர்கள்.. அப்படியென்றால் பூலோகத்துக்கு யாரை அனுப்புவது" ஒரு குழுவைப் பரலோகத்திலிருந்து பூலோகத்துக்கு அனுப்புவதிலுள்ள நெருக்கடியைப் பிதா விளக்குகிறார்.

"பிதாவே பரலோகத்திலிருந்து ஒரு குழுவை அனுப்புவதில் ஏற்பட்டுள்ள சிக்கலைத் தீர்ப்பதற்கு என்னிடம் ஒரு ஆலோசனையுண்டு. பூலோகத்திலிருந்து வந்த இலட்சக் கணக்கான உயிர்கள் பரலோகத்தில் உள்ளனர். இவர்களில் சிலரைத் தெரிவு செய்து அனுப்புவது பற்றி ஆலோசித்துப்பாருங்கள்" இன்னொரு பிரதானி கூறுகிறார்.

"இது தான் சரியான வழி" பிதாவின் முகத்தில் திருப்தி தென்படுகின்றது. "பிதாவே பூலோகத்திலிருந்து வந்த இருவர் நமது பாதுகாப்பில் இருக்கின்றனர். இவர்கள் இருவரும் பூலோகத்தில் "குள்ள நரிகள்" என்று பெயரெடுத்தவர்கள். பூலோகத்தில் நடக்கின்ற அதர்மங்களை அறிந்து வருவதற்கு மிகவும் பொருத்தமானவர்கள்" பிரதமகுரு நிதானமாகக் கூறுகின்றார். "நீங்கள் தெரிவுசெய்தால் அது சரியாக-வே இருக்கும்.. யார் அவர்கள்"? பிதா நிதானமாகக் கேட்கிறார்.

"முதலாவது நபர் சகுனி இவன் பஞ்ச பாண்டவரின் காலத்தில் வாழ்ந்தவன் இவன் தனது சூழ்ச்சியினால் பஞ்ச பாண்டவரைச் சூதாடவைத்து அவர்களின் அரசுரிமையைப் பறித்தவன். அது மட்டுமல்ல திரௌபதையை துரியோதனனின் அரசசபையில் நிர்வாணமாக்க முயற்சித்தவன். இரண்டாவது நபர் ஒரு பெண். பெயர் "கூனி" இராமாயண காலத்தில் வாழ்ந்தவள். இவள் தனது சூழ்ச்சியினால் இராமனுக்குக் கிடைக்க வேண்டிய அரசுரிமையை பரதனுக்கு வழங்கி இராமனைக் காட்டுக்கு அனுப்பி வைத்தவள்" "சகுனி கூனி இவர்கள் இருவரையும் பெரும் குள்ளநரிகளென்று பூலோகத்தில் இப்போதும் பேசிக்கொள்கிறார்கள். நமது திட்டத்திற்கு இவர்களை விடப் பொருத்தமானவர்களைத் தேடமுடியாது பிதாவே" பிரதமகுரு மிக நிதனமாகக் கூறுகின்றார்.

"உங்களுடைய முடிவு சரியான-தாகவே இருக்கும் சகுனியையும் கூனியையும் அழைத்துவர ஏற்பாடு செய்யுங்கள்" பிதா அனுமதி வழங்குகின்றார். சில நிமிடங்களில் சகுனியும், கூனியும் அழைத்து வரப்படுகின்றனர் பூலோகத்தில் இவர்கள் இருவரும் எப்படி இருந்தார்களோ உடற் தோற்றத்தில் எந்த மாற்றங்களுமின்றி அப்படியே இருக்கின்றார்கள். பரலோகத்தில் உடல்கள் வளர்வதுமில்லை தேய்வதுமில்லை கூனியும் சகுனியும் கைகட்டி அடக்கமாக நிற்கின்றனர்.

சகுனி- கம்பி போன்ற தாடி மீசை சதைக்குழிக்குள் புதைந்து கிடக்கும் நெருப்புக்கண்கள், உருகி உறைந்த இரும்புக்கம்பி போன்ற மெல்லிய உடல் பன்றியின் முட்கள் போன்று குத்திட்டு நிற்கும் கண்புருவ மயிர்கள்.

கூனி - முதுகு வளைந்து கேள்விக்குறியின் வடிவில் நிற்கிறாள் சலாகை வைரம் போன்ற மெல்லிய பலமான உடல், இரத்தக் குழம்பு போன்ற கண்கள் வரண்ட முகம்.

"வணக்கம் பிதாவே! எங்களை ஏன் அழைத்தீர்கள்" இருவரின் சார்பிலும் சகுனி கேட்கிறார். சகுனியின் கண்கள் சபையைத் துளாவி வருகின்றன...!

"பூலோகத்தில் பொதுமக்கள் பெரும் அவலங்களை அனுபவிப்பதாக அறிகிறோம். அதன் உண்மை நிலைகளை அறியாமல் நாங்கள் எந்த முடிவுகளையும் எடுக்கக்கூடாது. மிகப் பெரும் இரண்டு அரசுகளைத் திணறவைத்த உங்கள் இருவரையும் பூலோகத்துக்கு அனுப்பி அங்குள்ள உண்மை நிலவரங்களை அறிய முடியுமென எங்கள் சபை தீர்மானித்துள்ளது." பரலோக சபையின் முடிவை பிதா விளக்குகிறார்.

சபையில் அமைதி. அமைதி தொடர்கிறது. சபையில் உள்ளவர்களுக்குப் பெரும் குழப்பம்..

"பிதாவே எங்களை மன்னியுங்கள் பூலோகத்துக்குச் சென்று உளவு பார்த்து வரும் வல்லமை இப்போது எங்களுக்கில்லை" சகுனி மிகுந்த வேதனையோடு கூறுகிறார் .

"சூது வாதுக்கென்று பெயரெடுத்த நீங்களே இப்படிக்கூறலாமா"? பிதா ஆச்சரியத்தோடு கேட்கிறார்.

"பிதாவே நாங்கள் அரசியல் சூது செய்த காலத்தில் அரண்மனைக்குள் இருந்த அனைவருமே மிகவும் நீதியானவர்களாக இருந்தார்கள்.. நாங்கள் மட்டுமே சூழ்சிக்காரர்களாய் இருந்தோம். ஆனால் இன்று பூலோகத்தில் உள்ள தலைவர்கள் அனை-வருமே கைதேர்ந்த சூழ்சிக்காரர்களாக இருக்கிறார்கள். இவர்களிடம் எங்கள் குள்ளத்தனம் பலிக்காது."

பிதாவே நாங்கள் பூலோகத்துத் தலைவர்களிடம் தோற்றுப் பல ஆண்டுகளாகிவிட்டன. நாங்கள் அவர்களிடம் கற்றுக் கொள்ள வேண்டியவர்களாகவே இருக்கிறோம். பிதாவே" சகுனி மிகவும் வேதனையோடு கூறுகிறார்.

பரலோகத்தின் பிதாவும், மந்திரி பிர-தானிகளும் திகைத்துப்போய் இருக்கின்றனர். ●

## திருத்தந்தையின் திருமடல்



உலகின் ஒவ்வொரு மறைமாவட்டத்திலும், 2020ம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் கொடுமையை விசாரிக்கும் அலுவலகங்கள் உருவாக்கப்படும் கத்தோலிக்க திருஅவையில் பாலியல் கொடுமைகளை ஒழிப்பதற்கு, ஒட்டுமொத்த திருஅவையும், தலத்திரு அவை அளவிலும், உலக அளவிலும் எடுக்கவேண்டிய முயற்சிகளை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 'Vos estis lux mundi' என்ற திருத்தூது மடல் வழியே கூறியுள்ளார் என்று, திருப்பீடத் தகவல்தொடர்பு அவையின் செய்திப் பிரிவு இயக்குனர் அந்த்ரேயா தொர்னியெல்லி அவர்கள் தன் தலையங்கக் கட்டுரையில் கூறியுள்ளார்.

### 2020ம் ஆண்டில் மறைமாவட்ட அலுவலகங்கள்

உலகின் ஒவ்வொரு மறைமாவட்டத்திலும், 2020ம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் இந்த கொடுமையை விசாரிக்கும் அலுவலகங்கள் உருவாக்கப்படும் என்பதை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மடல் தெளிவுபடுத்தியுள்ளது என்பதை தொர்னியெல்லி அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

இளம் துறவியர் மற்றும் குரு மாணவர்கள் சிறுவர், சிறுமியருக்கு எதிரான கொடுமைகள் மட்டுமல்ல, மாறாக, அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி பாலியல் கொடுமைகளை, இளம் துறவியர் மற்றும் குரு மாணவர்கள் மீது மேற்கொள்வோரையும் குறித்து, இம்மடலில் விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன என்று தொர்னியெல்லி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய குற்றங்கள் குறித்து, ஒவ்வொரு நாட்டிலும் நிலவி வரும் விதிமுறைகள், நடவடிக்கைகள் ஆகியவற்றை, இம்மடல் எவ்வகையிலும் மாற்ற விழையவில்லை என்பதையும் தொர்னியெல்லி அவர்கள் தெளிவாக்கியுள்ளார்.

### தலத்திருஅவைக்கு கூடுதல் பொறுப்பு

இந்தக் கொடுமையைத் தீர்க்கும் நோக்கத்துடன், ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தலத்திருஅவைக்கு கூடுதல் பொறுப்பை வழங்கியுள்ளதன் வழியே, இந்தப் பழியை திருஅவையிலிருந்து முழுவதும் நீக்க திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மேற்கொண்டு வரும் தீவிர முயற்சிகள் இம்மடலில் தெளிவாகிறது என்று தொர்னியெல்லி அவர்கள் தன் தலையங்கக் கட்டுரையில் கூறியுள்ளார்.

# காவலன் கலசம்

(சென்றவாரத் தொடர்ச்சி..)

### மும்முனைப் போராட்டம்

யூதம், இஸ்லாம், கத்தோலிக்கம் மூன்றும் ஒரு நிலத்தில் இருந்து தோன்றியவை. ஆயினும் காலவோட்டத்தில் இம்மதங்கள் மூன்று வெவ்வேறு திசைகளில் சென்றவை மட்டுமல்ல, ஒன்றுக்கொன்று எதிரிகளாகின.

யூதம் இன்னமும் 'மெசியா' வருவார் என்று எதிர்பார்த்திருக்கிறார்கள். இயேசு தான் மெசியா என்று ஏற்றுக் கொள்ளவில்லை. இயேசுவைக் கொலை செய்தது யூதமத தலைமைக் குருக்கள். இன்று இதைச் சொன்னால் உடனே-யே இது 'யூதர்களுக்கு எதிரானது' என்று போர்க்கொடி தூக்கி விடுவார்கள். ளார்கள். அதற்காக அவர்கள் எதையும் செய்வார்கள். தற்கொலையும் செய்வார்கள்.


போர் போர் தான். கொலை கொலை தான். அதுவும் திட்டமிட்டுச் செய்யும் கொலை படுகொலை. இதில் புனிதமொன்றும் இல்லை. எந்த மதம் இப்படிப்பட்ட கொலைகளைச் செய்தாலும் அவை தண்டிக்கப்பட வேண்டும். கண்டிக்கப்படவேண்டும். சிங்கள பௌத்த அடிப்படைவாதம் இதற்கு விதிவிலக்கல்ல.

### அண்மையில் நடந்தவை

கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்ரியார் கோயில் கொச்சிக்கடை புனித அந்தோனியார் கோயில், மட்டுநகர் சீயோன் தேவாலயத்தில் நடைபெற்ற குண்டுத் தாக்குதல் மிலேச்சத்தனமான செயல். வேண்டியது.

கொழும்புப் பேராயர் இந்த இடங்களுக்குச் சென்று அதாவது தன்னுடைய மறைமாவட்டக் கோவில்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்து அவர்களது இழப்பில் பங்கு கொண்டது வரவேற்க வேண்டிய செயலொன்று. கட்டுவப்பிட்டியாவிலும், கனத்தையிலும் நடைபெற்ற இறுதி அடக்கச் சடங்கை தானே தலைமையேற்றது போற்றுதற்குரிய செயல்களாகும். தனக்குத் தரப்பட்ட குண்டு துளைக்காத வாகனத்தை திருப்பி அனுப்பி 'எனக்கு அது தேவையில்லை. என்னை நானே காப்பாற்றிக் கொள்வேன் அப்படியில்லை நான் சாகத்தான் வேண்டுமென்றால் அதை ஏற்றுக்கொள்வேன்' என்று அவர் கூறிய

## ② இருளில் தோய்ந்த உயிரப்பு விழா






வார்த்தைகளைப் பௌத்த குருவே வரவேற்றுப் பாராட்டியுள்ளார். நாமும் பாராட்டுகின்றோம். இப்பொழுது தான் அவரது தலைமைத்துவம் தோன்ற ஆரம்பித்துள்ளது. வளரட்டும் அவரது தலைமைத்துவம்.

உயிர்த்த ஞாயிறு நடந்த கோழைத்தனமான தாக்குத நண்பர்களாக இருந்தாலும் அவர் தனது கூற்றிலிருந்து பின்வாங்க மாட்டார் என்று மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

சிங்கள பௌத்த அடிப்படைவாதத்தை வளர்ப்பவர்கள் யாரென்று பேராயருக்குத் தெரியும். அவர்களுள் சிலருடன் பேராயர் கைகோர்த்து நிற்கிறார்களென்றும் மக்களுக்குத் தெரியும்.

### மதத்துள் துவேஷம்

பேராயருடைய மறைமாவட்டத்தில் ஆயிரக் கணக்கான தமிழ்க் கத்தோலிக்க மக்கள் வாழ்கிறார்கள். கோவில்களுக்குப் போகின்றார்கள். பணம் கொடுக்கிறார்கள். ஆயினும் பேராயரின் மறைமாவட்டத்தில் உள்ள சில குருக்கள் இதைத் துவேஷத்தோடு வழிபாடுகளை நடத்துகிறார்கள். இவர்களை இனங்கண்டு இவர்களை மனம்மாற வைக்க வேண்டும். அன்றேல் அவர்கள் கிறிஸ்துவின் குருக்களாகப் பணிபுரிய முடியாது.

நான் மீண்டும் மீண்டும் கூறுவது: பாகு-பாடுகளை வளர்க்குமட்டும், நல்லிணக்கம், ஒற்றுமை என்ற சொற்களுக்கு அர்த்தமில்லை. மதங்களுக்குள்ளும் இல்லை: வெளியேயும் இல்லை.

யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் உயிர்த்த ஞாயிறு தேவாலயங்களில் நடைபெற்ற படுகொலைகளை அறிந்து, சம்பந்தப்பட்ட தேவாலயங்களுக்கு நிகழ்வு நடந்த ஒரு குறுகிய காலத்திலேயே அம்மக்களைச் சென்று சந்தித்தார். மக்கள் அவரைப் பாராட்டுகிறார்கள். நாமும் பாராட்டுகின்றோம்.

இன, மத, மொழி பாகுபாடுகளை மேவிய வாழ்க்கைமுறை ஒன்று இந்நாட்டில் வளருமட்டும் நல்லிணக்கம், ஒற்றுமை என்ற சொற்களைத்தயவுசெய்து விட்டுவிடுங்கள். இரட்டை வாதத்தில் (Clvatism) ஒற்றுமை என்றுமே வராது. இந்நாட்டு அரசியல் வாதிகளும், சில மதகுருக்களும் வரவிடமாட்டார்கள். இது யதார்த்தமான உண்மை.

(வளரும்....)

இன்று இஸ்ராயேல் ஒரு சிறிய நாடாக 'இருந்தாலும் அவர்களைச் சுற்றிவர இருக்கும் அரேபிய நாடுகளுக்கு அவர்கள் ஒரு சவாலாகவே இருக்கிறார்கள். பலஸ்தீனிய மக்களை மிகக் கேவலமாக நடத்துகிறார்கள்.

உயிர்த்த ஞாயிறு நடைபெற்ற கொடுமைகளைவிட அதிக கொடுமை-களைச் செய்கின்றார்கள். ஆனால் ஐரோப்பிய நாடுகள் குறிப்பாக வட அமெரிக்க அரசியல் இஸ்ராயேலுக்கு ஆதரவாகவே செயற்படுகிறார்கள். கொடுமைகளை நியாயப்படுத்துகிறார்கள். இதை அரேபிய நாடுகள் எதிர்க்கிறார்கள், வெறுக்கிறார்கள். இந்த ஐரோப்பிய நாடுகளையும், வட அமெரிக்காவையும் கிறிஸ்தவ நாடுகளாகவே இஸ்லாமிய மக்கள் நினைக்கிறார்கள். ஆனால் அங்கு கிறிஸ்தவம் சுடலையை நோக்கி நகருகின்றது.

### புனிதப்போர்

கத்தோலிக்கம், இஸ்லாமியரிடமிருந்து தமக்கே உரிய புனித பூமியை இஸ்லாமிய மக்கள் ஆக்கிரமித்துள்ளார்கள். அவற்றை மீட்க வேண்டுமென்று 1292 இல் இருந்து ஒரு 'புனித'ப்போரை முன்னெடுத்தார்கள்.

முதலாவது புனிதப்போர் பாப்பரசர் (அன்றைய மொழி) இரண்டாவது ஒர்பன் (Urban II) காலத்தில் ஆரம்பித்தது. 1292 வரை எட்டுப் 'புனித'ப்போர்கள் நடைபெற்றன. நீண்ட வரலா றொன்றை நான் சுருக்கமாகவே கூறிவிட்டேன். இதிலிருந்து இஸ்லாமிய மக்கள் கிறிஸ்தவர்களை வெறுக்க ஆரம்பித்தார்கள்.

### ஜெருசலேம்

ஜெருசலேம் நகர் மூன்று மதங்களுக்கும் பொதுவானதொன்று. ஆயினும் அண்மையில் இஸ்ராயேல் ஜெருசலேமைத் தமது தலைநகரமாக்கினார்கள். இதை முதலாவதாக ஆதரித்தவர் டொனாட்றம் வட அமெரிக்காவின் ஜனாதிபதி போப் பிரான்சிஸ் ஜெருசலேம் நகர் மூன்று மதங்களுக்கும் பொதுவானதாக இருப்பதே நல்லது என்று பலமுறை கூறினார். அவை அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்கான கதையானது.

### இன்றைய 'புனித'ப் போர்

ஐ.எஸ்.ஐ.எஸ். தாங்கள் ஒரு 'புனித'ப்போரையே செய்வதாகக் கூறிக் கொள்கிறார்கள். இந்த உலகத்தையே ஒரு இஸ்லாமிய உலகமாக மாற்ற வேண்டுமென்று திடசங்கற்பம் எடுத்துள்

## பாகுபாட்டில் ஒற்றுமை வராது – வரமுடியாது

**கரவையூர் செல்வம்**

பல்வேறு இனத்தவர்களும், மதத்தினரும், அந்நிய நாடுகளும் இச்செயலை வன்மையாகக் கண்டித்துள்ளார்கள். வரவேற்க லுடன் தொடர்பு கொண்ட (தொடர்புகள் இருந்தால்) அரசியல் வாதிகள் நீதிமன்றம் கொண்டுவரப்பட வேண்டும். நீதி நிலைப்படுத்தப்பட வேண்டும்மென்றும், தலைமைக் குரு சொல்லியுள்ளார். அவரது

## சோதனைகளிலும் மாதா இறைவனோடு இணைந்திருந்தார்



**திருவிவிலியம் தூய கன்னி மரியாவைப் பேறு பெற்றவர் என்று எதனால் அழைக்கின்றது?** மாதா கூட தாம் பேறு பெற்றவர் என்றும், எல்லாத் தலைமுறையினரும் தம்மைப் பேறுபெற்றவர் என்று அழைப்பர் என்றும் கூறுகின்றார். (லூக் 1 : 48). வேறு எவருக்கும் கிடைக்காத நான்கு அருளை ஆண்டவர் மாதாவுக்குக் கொடுத்தார். கத்தோலிக்க திருச்சபையும் மாதாவைக் குறித்து நான்கு மறையுண்மைகளைப் போதிக்கின்றது.

அவை முறையே மாதா இறைவனின் தாய், நித்திய கன்னி, ஜென்ம பாவமில்லாமல் பிறந்த அமலோற்பவ மாதா மற்றும் விண்ணேற்பு அடைந்தவர். இந்த மாபெரும் அருளைப் பெற்றதால் அல்ல அவர் பேறு பெற்றவர் என்று அழைக்கப்படுவது. மாறாக அவரது நம்பிக்கையால் தான். ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர் (லூக் 1:45).யோவான் நற்செய்தியில் இயேசு இரண்டு நற்பேற்றைக் குறித்துக் கூறியுள்ளார். ஒன்று : பிறருக்குச் செய்யும் சேவை (13:17) இரண்டு : காணாமலே நம்புவது (20:19). மாதாவிடம் இந்த நம்பிக்கை இருந்ததால்தான் அவர் பேறுபெற்றவர் ஆனார்.

### எல்லா சோதனைகளையும் ஏற்றுக் கொண்டவர்

மாதாவைக் குறித்து சிந்திக்கும் போது. அவர் உண்மையில் மனிதப் பிறவி தானா? என்ற சந்தேகம் வரும். அவர் நம்மிடமிருந்து எவ்வளவோ மாறுபட்டவராகக் காணப்படுகின்றார். இயேசுவைப் போலவே மாதாவும் எல்லாச் சோதனைகளையும் ஏற்றுக்கொண்டார். பலவிதமாகச் சோதிக்கப்பட்டார். நம்பிக்கையிலும் அவர் நம்மைப் போலவே சோதிக்கப்பட்டார். ஆனால் நாளுக்கு நாள் மேன்மேலும் நம்பிக்கையில் வளர்ந்தார்! மாதாவிடம் கபிரியேல் வான தூதர் மங்கள வார்த்தை அறிவித்தபோது மாதா அதை ஏற்றுக்கொண்டார். உடனே இறைவார்த்தை மாதாவிடம் தங்கியது. அவர் கருத்தரித்த போது தாம் கருவுற்றிருப்பதை அவரால் மறைக்கவும் முடியவில்லை. எப்படி அவர் கருத்தரித்தார் என்பதற்கு சரியான விளக்கமும் கொடுக்க முடியவில்லை.

தமக்கு மண ஒப்பந்தமான யோசேப்பிடம் என்ன சொல்வது என்று அவர் கண்டிப்பாகக் கலங்கியிருப்பார். கவலைப்பட்டிருப்பார். தமது மணமகளை யோசேப்பு காணச் சென்றபோது மரியா கருவுற்றிருப்பதை அறிய நேர்ந்ததால் அவருடைய மனம் எப்படித் துடித்திருக்கும் அவர் மறைவாக அழுதிருப்பார் எப்படி ஒரு மனிதனால் அதைத் தாங்கிக்கொள்ள முடியும்? அது தான் மாதாவின் இதயத்தில் பாய்ந்த முதல் வாளாக இருந்திருக்கும்.

மாதாவின் வாழ்க்கையில் தோன்றிய மாபெரும் சோதனைதான் கல்வாரியில் தம் ஒரே மகனான இயேசுவின் பெருந் துன்பங்களும் இறப்பும். இயேசு ஆடை எதுவுமின்றி, ஓர் அடிமையைப் போல் சிலுவையில் இறந்தார். சிலுவையில் இறப்பவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என்பது தான் இஸ்ரயேலின் அக்கால எண்ணம்.

இந்த இயேசு உண்மையில் இறை மகன் தானா? இறைவனின் மாட்சிமை, வல்லமை, மாண்பு, பெருமை, சிறப்பு எதுவும் இவரது முகத்

**மாதாவின் வணக்க மாதத்தையொட்டிய கட்டுரை**

தில் இல்லையே! திருத்தூதர்களும் சீடர்களும் இயேசுவை விட்டு ஓடிப்போனது அவர்கள் யூதர்களுக்கு அஞ்சியதால் மட்டுமல்ல, தாங்கள் நினைத்ததைப் போன்ற தெய்வீகம் இந்த இயேசுவிடம் காணப்படாததாலும் கூடத்தான்.

மாதாவின் நம்பிக்கை உச்சக் கட்ட சோதனைக்குட்பட்டது புனித சனியன்றுதான்! இறந்து நிறம் மங்கி, கட்டைபோல் அடக்கம் செய்யப்பட்டவரிடம் மாதா என் மகனே! என் இறைவா! என் ஆண்டவரே! என்று சொல்லியிருந்தால், அது தான் அற்புதமான நம்பிக்கை! இறந்து போவரை நோக்கி நாம், என் இறைவா! என் கடவுளே! என்று சொல்வோமா? யாராவது சொல்வார்களா? ஆனால் மாதா சொன்னார்! அது தான் நம்பிக்கையின் மகுடமா-கத் திகழ்கின்றது!

தொமினிக்கன் சபையைச் சேர்ந்தவர்களுக்கு மாதாவைக் குறித்து ஒரு மன்றாட்டு மாலை உள்ளது. அதில் பின்வரும் மன்றாட்டு உள்ளது. புனித சனிக்கிழமையன்றும் இயேசு கடவுள் என்று நம்பிய மாதாவே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும். இது ஓர் அற்புதமான மன்றாட்டு.

நாம் தினந்தோறும் சொல்லி மன்றாடவேண்டிய ஒரு மன்றாட்டு. புனித சனியன்று இயேசு இறை மகன் என்று நம்பிய மாதாவின் முன் உயிர்த்தெழுந்த இயேசு தமது முழு மாட்சிமையில் தோன்றியபோது மாதா எந்த அளவுக்கு சந்தோஷப்பட்டிருப்பார். அவரது நம்பிக்கை மெய்ப்பிக்கப்பட்டது அல்லவா?

# “படையினரின் தயவில் பாதுகாப்பு
# வலிகாமம் வடக்கு மக்களின் வாழ்


## ஊறணி - பலாலிப் பங்குத்தந்தை அருட்பணி T.E.தேவராஜன் அடிகளாரோடு ஓர் நேர்காணல்

**வணக்கம் தேவராஜன் அடிகளாரே!**
உங்களை இம் மாலைப்பொழுதில் பாதுகாவலன் வாசக நேயர்களின் சார்பாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சி. 30 ஆண்டுகளுக்கு முன் இப்பங்கின் பங்குத்தந்தையாக இருந்த நீங்கள் மீண்டும் மக்கள் போரின் பின் மீள்குடியேறும்போது அவர்களின் வேண்டுதலுக்கு அமைவாகவும் ஆயரின் பணிப்பிலும் இப்பங்கை மீண்டும் பொறுப்பேற்றுள்ளீர்கள். உங்களின் சமகாலப் பணி பற்றிக் கூறுங்களேன்...

**பதில்:** மகிழ்ச்சியாகப் பணி செய்கிறேன். பணிப்பொறுப்பேற்று ஒரு ஆண்டுக்கு மேலாகி விட்டது. முன்பு இருந்த நிலை இல்லை. பாதுகாப்புப்படை முகாம்களின் மத்தியில் குடியிருந்து வாழும் நிலை இது. படையினரின் தயவிலேயே நாம் வாழ்ந்து வருகின்றோம். முழுமையாக மக்கள் தமது இல்லிடங்களுக்குத் திரும்பவில்லை. பலர் இடம்பெயர்ந்து சென்ற இடங்களில் நிரந்தரமாகத் தங்கி விட்டனர். பூர்வீக உணர்வில் அவ்வப்போது வந்து செல்லும் குடும்பங்கள் அதிகம். படித்தவர்கள், உத்தியோகத்தர்கள் மீண்டும் ஊர் திரும்பவில்லை. இருப்பினும் வீடு திரும்பிய குடும்பங்களுடன் அவர்களின் மறுவாழ்விற்காக சேர்ந்து வாழ்கின்றேன்.

**கேள்வி:** இவர்களின் ஆன்மீக நிலை பற்றி யாது சொல்ல விரும்புகின்றீர்கள்?

**பதில்:** அவர்கள் இடம்பெயர்ந்த வாழ்வில் பல இடங்களுக்கு அலைக்கழிக்கப்பட்டு உயிர்களை, உடைமைகளை இழந்து வந்தவர்கள். மீண்டும் தமது பிறப்



பிடம் வந்தபோது அவர்களின் வாழ்வின் நிலை அவர்களின் இல்லிடங்களைப் போல் அடி அத்திவாரம் கூட அற்ற நிலைதான் தென்பட்டது. தமது இடப்பெயர்வுக் கால கஸ்டங்கள் ஊடாகப் பல படிப்பினைகள் கற்று வந்துள்ளனர். அவர்களின் மத்தியில் இறைபற்றுக் குறையவில்லை. விசுவாச வாழ்க்கையில் நிலையாக உள்ளனர்.

**கேள்வி:** உங்கள் பங்கில் மகாஞானொடுக்கம் ஒன்றை நடத்தினீர்களே அது உங்கள் பணிக்கு வெற்றி கொடுத்ததா?

**பதில்:** ஆம். அமலமரித்தியாகிகள் சபையைச் சார்ந்த 5 குருக்களின் உதவியுடன் கடந்த பங்குனி 17ம் திகதி முதல் உயிர்ப்பு நாளாகிய சித்திரை 21ம் திகதி வரை இஞ்ஞானொடுக்கம் அமைந்தது. மிக்க பலன் கொடுத்தது என்றே கூறுவேன். குருக்கள் வீடுகளைச் சந்தித்து மக்களை அருட்சாதன வாழ்வில் உறுதிப்படுத்தியுள்ளனர். அவர்களுக்கு ஓர் நம்பிக்கையை வாழ்வில் ஏற்படுத்தியுள்ளனர். அதுவே வேண்டியதொன்றாக இருந்தது. அவர்கள் இடம்பெயர்வின்போது சிதறி ஆங்காங்கே வாழ்ந்தமையினால் அவர்களுக்குள் கூட்டு - உறவு வாழ்வு (Community life) குறைவாகவே இருந்தது. இஞ்ஞானொடுக்கமானது உறவுகளைத் தம்மகத்தே கட்டி எழுப்பி, அன்பிய வாழ்வை ஊக்குவித்து, எல்லோ ரையும் பாகுபாடு இன்றி இணைத்து சமூகத்தில் வாழ வழிகோலியது.

**கேள்வி:** மேய்ப்புப் பணித் தீர்மானங்கள் உங்கள் பங்கில் நடைமுறைப்படுத்த முடிகிறதா?

**பதில்:** ஆம். நிச்சயமாக குறிப்பாக இஞ்ஞானொடுக்கத்தின் பின் யாரும் எக்கோவிலிலும் வழிபாடுகளில் உரிமையுடன் பங்கேற்கலாம். சிறப்பாக பொதுக் கொண்டாட்ட வழிபாடுகளில் - திருநாட்களில் எல்லா ஆலய மக்களும் இணைந்தே கூட்டாகச் செயற்படுகின்றனர்.

**கேள்வி:** மகிழ்ச்சி பாதர்! உங்கள் மேய்ப்புப் பணிகளில் அமையும் ஆலயத் திருஅவை பற்றி விபரியுங்கள்...

**பதில்:** ஊறணி புனித அந்தோனியார் ஆலயம் முலவை வள்ளுவர்புரம் அடங்கலாக (78 குடும்பங்கள்), பலாலி அன்ரனிபுரம் (148 குடும்பங்கள்), வளலாய் (65 குடும்பங்கள்) உள்ளனர். 60 குடும்பத்தினர் முலவை வள்ளுவர்புரம் பகுதிகளுக்கு எதிர்வரும் நாட்களில் வந்து சேரவுள்ளனர். இவ் ஆலயங்களைச் சேர்ந்த குடும்பங்களை நான்கு வலயங்களாகப் பிரித்து வைத்துள்ளேன். வீடு சந்திப்புக்களை நிறைவு செய்து தரவுகளையும் ஆவணப்படுத்தி வைத்துள்ளேன். (பல வர்ணங்களிலான கோவை கள் பலவற்றைக் காண்பிக்கின்றார். எத்தனை விதவைகள், அநாதைகள், மாற்றுத் திறனாளிகள் இப்பங்கில் உள்ளனர் என்ற அட்டவணைப்படுத்தப்பட்ட பதிவுகளையும் காண்பிக்கின்றார்). இவற்றை ஞானொடுக்கத்தின்போது சீர்செய்ய முடிந்தது.

**கேள்வி:** உங்கள் பங்கிலுள்ள ஆலயங்களும் அவற்றின் புனர்நிர்மாணப் பணி பற்றியும் காவலன் வாசகர்களுக்கு தெரிவிக்க முடியுமா?

**பதில்:** எனது பங்கின் கீழ் உள்ள ஆலயங்களானவை :

பலாலி ஆரோக்கிய அன்னை ஆலயம், பலாலி அன்ரனிபுரம் வனத்து புனித அந் தோனியார் ஆலயம், வளலாய் மடுமாதா ஆலயம், முலவை செபமாலை அன்னை ஆலயம், வள்ளுவர்புரம் வேளாங் கண்ணி மாதா ஆலயம், ஊறணி புனித அந்தோனியார் ஆலயம் என்பன அடங்குகின்றன. இவை அனைத்திலும் நிரந்தர ஆலய அமைப்புக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. பெரும்பாலும் பங்கு மக்களே தமது சரீர மற்றும் பண உதவிகளை வழங்கி புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். எல்லா ஆலயங்களும் முழுமை அடையாத நிலையிலேயே உள்ளன.

**கேள்வி:** பாதர்! உங்களின் இப்பணிகளை பார்க்கச் சந்தோஷமாகவுள்ளது. ஞானொடுக்கம் பலன் கொடுத்துள்ளது தானே!

**பதில்:** ஆம், ஆனால் ஓர் குறை. சித்திரை 21ம் திகதி ஆயரின் பிரசன்னத்தில் மகாஞானொடுக்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களைப் பிரகடனம் செய்து திருப்பலி - கலை நிகழ்வுகள் ஊடாக நிறைவு செய்யத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலை காரணமாக கைகூட வில்லை. ஞானனொடுக்கத்தின் நிறைவு நினைவாக ஆலய வளாகத்தில் சிலுவை ஒன்றை ஸ்தாபித்துள்ளோம்.

**கேள்வி:** உங்கள் பங்குத்தளத்தில் எல்லாப் பகுதிகளும் படையினரால் முழுமையாக விடுவிக்கப்பட்டதா?

**பதில்:** இல்லை, இல்லை. மயிலிட்டி புனித காணிக்கை மாதா ஆலயம், பலாலி புனித செபஸ்தியார் ஆலயப் பகுதிகளுக்கு செல்ல முடியாது. படையினரின் அனுமதியுடன் சிலரை அழைத்துச் சென்றேன். அங்கு அடையாளம் காண்பதற்கு யாதும் கிடையாது. இப்பிரதேசம் விமானத்தளத்துக்கருகில் அமைவதால் இப்பிரதேசம் விடுவிக்கப்படமாட்டாது என்றே சொல்லப்படுகின்றது. இப்போது எனது பங்கில் அறு இடங்களில் தற்காலிக ஆலயங்கள் அமைத்தே பல மேய்ப்புப் பணியை ஆற்றி வருகின்றேன்.

**கேள்வி:** உங்கள் பங்கில் உள்ள இளையோர் பற்றி கூறுங்களேன்?

**பதில்:** பங்கில் இளையோர் ஒன்றியம் உண்டு. ஞானொடுக்கக் காலத்தில் கலை நிகழ்வுகளை நடாத்த அவர்களே திட்டமிட்டிருக்கின்றனர். "விண்மீன் விளையாட்டுக் கழகம்" ஒன்றை ஸ்தாபித்து விளையாட்டுத் துறையில் சிறப்பாக காற்பந்தாட்டத் துறையில் முதன்மை நிலையில் உள்ளனர். அவர்களுக்கு அது பொருமகிழ்ச்சியும் அடையாளமும் கூட. இங்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன் இளையவர்கள் ஏன் பெரியோர் கூட மது, கஞ்சா போன்ற தீய பழக்கவழக்கத்திற்கு அடிமையானவர்கள் அல்ல.

**கேள்வி:** பாதர் யாழ் குடாவில் இப்படியான ஓர் கிராமம் இருப்பது முன் உதாரணமே! அதற்கான காரணம் என்ன என்று நினைக்கிறீர்கள்?

**பதில்:** இவர்கள் கடின உழைப்பாளிகளும், தேவ பயம் உடையவர்களும் என்பது தான்.

**கேள்வி:** மக்களின் வாழ்வாதார நிலை பற்றிக் கூறுவீர்களா?

**பதில்:** எம் பங்கில் பெரும்பாலானோர் மீனவர்கள். கணவன்மார் மீன் பிடித்து வந்தால் மனைவிமாரின் உதவியுடனேயே அவற்றைச் சந்தைப் படுத்துவர். வாழ்வியலுக்கு வேண்டியதை உழைக்கின்றனர். அரச வீட்டுத் திட்டங்களைப் பெற்று வருகின்றனர். சிலருக்கு கழிப்பறை கிடைக்கப் பொறாத குறையுண்டு. தொழிலுக்கு வேண்டிய படகு, வலைகள் வாங்குவதற்கு உதவித்திட்டமும் கிடைக்கப் பெறுகின்றது. ஏதோ வாழ்கின்றனர். நீர் அவர்களின் இல்லிடம் போகும் போது இவற்றை அவதானிக்கலாம்.

**கேள்வி:** இப்பகுதியில் இந்துக்கள் வாழ்கின்றனரா? அவர்களுடன் உங்கள் உறவு நிலை?

**பதில்:** ஆம்! நிறையக் குடும்பங்கள் உண்டு. எமக்கும் அவர்களுக்கும் இடையே சக வாழ்வு உண்டு. எந்தப் பிரச்சினையும் இல்லை. கூடுதலானோர் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு வருவர். பொது அமர்வுகள், கூட்டங்களில் இராணுவமும், அரச அதிகாரிகளும் பங்குத்தந்தையாகிய எனது கருத்துகளுக்கு முன்னுரிமை கொடுத்து, மதித்து ஆதரித்து வருகின்றனர்.

**கேள்வி:** உங்கள் பங்கில் 300 குடும்பங்கள் வாழ்கின்றனர். பாதுகாவலன் படிப்போர் மிக சொற்பமே! எமது வாசக நேயர்களை உங்கள் பங்கில் கூட்ட முடியுமா?

**பதில்:** ஆம்! பதினைந்து பேர் தான் பத்திரிகை வாங்குகின்றனர். இப்போது இளையோர் மட்டில் வாசிக்கும் ஆற்றலும் குறைந்து வருகின்றது. இப்படிப்பட்ட நம் கிராமத்து செய்திகள் உங்கள் பத்திரிகையில் வரும் போது அவற்றை அவர்கள் வாசிக்கத் தூண்டி, நிச்சயம் விற்பனையை அதிகரிக்கச் செய்வேன்.

*பாதர் நன்றி! உங்களின் பயன் உள்ள நேரத்தை என்னுடன் எமது பாதுகாவலன் நேயர்களுக்காகவும் செலவு செய்தமைக்காக. உங்களின் குருத்துவ வாழ்வை நீங்கள் இங்கிலாந்தில் முதியோர், தனிமைப்பட்டோர் மத்தியில் ஆற்றிய பணியையும் கூட நேரில் பார்த்து ஆச்சரியப்பட்டவன் நான். இங்கும் ஏழை, எளிய மக்களுடன் உங்களின் எளிமையான வாழ்வினூடாக இயேசுவை அடையாளப்படுத்துகின்றீர்கள். உங்கள் பணி மேலும் எம் மக்களுக்குக் கிடைக்க எமது வாழ்த்துக்களும் நன்றிகளும்.*

அமைதியான மாலைப்பொழுது சனிக்கிழமை 11.05.2019 அன்று மாலை 4.00 மணியளவில் பாதுகாவலன் கலசம் பகுதிக்கு செய்தி திரட்டுவதற்காக நானும் யாழ் பல்கலைக்கழக ஊடகத்துறை விரிவுரையாளர்களான செல்வி. அனுதர்ஷினி, கேசிக்கா ஆகியோருடன் காங்கேசன்துறை, ஊறணி, வளலாய், பலாலிப் பகுதிக்குச் சென்றிருந்தோம்.

இராணுவ
பட்டமையில
செல்ல முடி
அந்தோனி
மற்றும் ச
குச் செய்தி
பதிவானை
கவும் இப்ப

## ஊறணி மக்களின்



இன்றைய இருபத்தியோராம் நூ
களும் நடைமுறைகளும் உலகளாவிய
சாவல்களுக்கும் முகம் கொடுக்க கூடிய
அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.
இன்று இலங்கை 30 வருட கா
விருத்தியை நோக்கிப் பயணித்துக் கொ
ஏக்கத்துடனும் இளைஞர்களுக்கான தே
ஏக்கத்துடன் நாட்களை கடத்திய வண்ண
இராணுவ அரண்களுக்கு மத்தி
ளுடைய அன்றாட வாழ்க்கையை இந்த ம
மக்கள் கிட்டத்தட்ட 1990 களில் யுத்தத்
இடங்களிற்கு 2017 ஆம் ஆண்டளவில்
லும் மாணவர்களின் நிலை கேள்விக் குறியாகவே உள்ளது. இப் பிரதேசத்தில் தரம் 1 தொடக்கம் 5 வரையான சிறார்கள் கல்வி பயிலக் கூடிய வகையில் யாழ். ஊறணி கனிஷ்ட வித்தியாலயம் காணப்படுகின்றது. இங்கு தற்போது 12 மாணவர்களே கல்வி கற்கின்றனர். ஆனால் இற்றைக்கு 27 ஆண்டு



களுக்கு முன் இப் பாடசாலையில் 240 ம
மேலும் மேற்பிரிவு மாணவர்கள் கல்வி க
தால் அயல் பிரதேசங்களில் உள்ள ந
போன்றவற்றிற்கு தமது கல்விக்காக செல்
இடைக்காட்டு பாடசாலைகளுக்கும் செ
பல சவால்களுடனே ஒவ்வொரு நாளை
பயன்படுத்த பலாலி மக்களுக்கு அனுமதி
யினூடாக தமது போக்குவரத்தினை மேற்
அதுமட்டுமல்லாது இன்றைய
போதைப் பொருளிற்கும் அடிமையாகி தம
இப்பிரதேசத்தில் காணப்படும் இளைஞர்க
வளப்படுத்தும் நோக்கில் தமது செயற்பா
றாக விண்மீன் விளையாட்டுக்கழகம் எ
அடையாளத்தினை பதிப்பதற்கு போராடுகி
அதே நேரம் வலிகாமம் வடக்
காணமுடியாமல் இருக்கின்றது. உதாரண
இருக்கிறார்கள். இளைஞர்கள் இல்லாத
னது. உள்நாட்டு யுத்தம் மக்களைச் சி
காரணமாகியிருக்கிறது. இளைஞர்களே
மிக்கவர்களாக மிளிர வேண்டும். முற்போ
ப்படும் இளைஞர்களால் தான் சமூக மாற்

# ப்புப்படை முகாம்களின் மத்தியில் ழ்வின் அவல நிலை”

அருட்பணி T.E.தேவராஜன் அடிகளார்

இராணுவ சோதனை சற்றுக் கூடுதலாகத் தென் பட்டமையினால் வளலாய், பலாலிப் பகுதிக்குச் செல்ல முடியவில்லை. ஆகவே ஊறணி புனித அந்தோனியார் ஆலய வளாகம், பங்குமனை மற்றும் சூழவுள்ள குடியிருப்புக்கள் எமக்குச் செய்திக்களங்களாயின. எம் மனங்களில் பதிவானவை நேர்காணலாகவும் கட்டுரைகளாகவும் இப்பகுதியில் பிரசுரமாகின்றன.

- அருட்பணி. எஸ்.ஏ.றொஷான்

## களின் கல்விக்கான ஏக்கம்



தியோராம் நூற்றாண்டில் வாழும் எமக்கு கல்விசார் கொள்கை உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்களுக்கும் டுக்க கூடிய வகையில் காணப்பட வேண்டும் என்பதே எம் ாகும்.

30 வருட கால யுத்த ரணங்களைக் கடந்து மீண்டும் ஓர் அபி ணித்துக் கொண்டிருக்கின்றது. 'அந்த வகையில் கல்விக்கான நக்கான தேவைப்பாட்டுடனும் ஊறணி என்னும் ஒரு கிராமமே திய வண்ணம் உள்ளது.

களுக்கு மத்தியில் இராணுவ முகாம்களுக்கு இடையில் தங்க- கயை இந்த மக்கள் நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். இப் பிரதேச ளில் யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்து மீண்டும் தமது ண்டளவில் குடியமர்த்தப்பட்டாலும் இக்கிராமத்தில் கல்வி பயி



யில் 240 மாணவர்கள் கல்வி கற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. கள் கல்வி கற்பதற்கான பாடசாலைகள் இங்கு இல்லாத காரணத் உள்ள நடேசுவராக் கல்லூரி மற்றும் யூனியன் கல்லூரி க்காக செல்லுகிறார்கள். இன்னும் சில மாணவர்கள் அச்சுவேலி நக்கும் செல்கின்றார்கள். இவர்கள் போக்குவரத்து ரீதியாக ாரு நாளையும் கடக்கின்றார்கள். இதில் பலாலி பாதையினை த அனுமதி வழங்கப்படாத நிலையில் அவர்கள் கே.கே.எஸ் வீதி தினை மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது.

இன்றைய இளைஞர்கள் குடிபோதைக்கும் கஞ்சா போன்ற மயாகி தமது வாழ்வினை தொலைத்து நிற்கின்றார்கள். ஆனால் இளைஞர்கள் இவ்வாறான தீய நாட்டங்களை தவிர்த்து தம்மை ு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கு சான் க்கழகம் என்ற ஒரு கழகத்தினை உருவாக்கி தங்களுக்கான த பேராடுகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ாமம் வடக்கில் உள்ள சில கிராமங்களில் இளைஞர்களைக் ு. உதாரணமாக ஊறணி கிராமத்தில் ஒரு சில இளைஞர்களே இல்லாத கிராமம் பிள்ளைகள் இல்லாத குடும்பத்துக்கு ஒப்பா- களைச் சிதறடித்து எங்கெங்கோ அந்நிய மண்ணில் வாழக் ளைஞர்களே எதிர்கால நம்பிக்கைகள். அவர்கள் கல்வி கற்று, திறன் ம். முற்போக்கோடு வளர்க்க- சமூக மாற்றம் சாத்தியமாகும்.

அனற் கேசிக்கா லோறன்ஸ்
யாழ்.பல்கலைக்கழகம்

## மூன்று தசாப்தம் கடந்தும் ஏதிலிகளாய் வலி.வடக்கு மக்கள்

வலிகாமம் வடக்கில் மக்கள் 1990 ஆம் ஆண்டு யுத்தத்தின் காரணமாகத் தமது சொந்த மண்ணைவிட்டு வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்கள். உடுத்த உடையுடன் கையில் கிடைத்தவற்றை எடுத்துக்கொண்டு இடம்பெயர்ந்தனர். வலிகாமம் வடக்கில் அன்று 45 கிராமசேவகர் பிரிவுகளில் மக்கள் வாழ்ந்து வந்தனர். வலிகாமம் வடக்கில் உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த காங்கேசன்துறை, ஊறணி, மயிலிட்டி, பலாலி உள்ளிட்ட பிரதேசங்கள் 27 வருடங்களுக்குப் பின் 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 54 ஏக்கர் காணியும் மயிலிட்டித் துறைமுகமும் விடுவிக்கப்பட்டு மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர். மக்களுடைய வாழ்விடங்கள் அனைத்தும் அழிந்த நிலையிலேயே மக்கள் மீளக்குடியேறியுள்ளனர். மீள் குடியேற்றம் இடம்பெற்று ஒரு வருடம் கடந்துள்ள நிலையில், இங்குள்ள மக்கள் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் பண்பாட்டு ரீதியில் பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியில் தமது நாளாந்த வாழ்க்கையை நகர்த்திச் செல்கின்றனர்.

இங்குள்ள மக்களின் மிக முக்கிய வாழ்வாதாரமாகக் கடற்றொழில் இருக்கின்றது. மீன்பிடித்தலைப் பிரதானமாகவும், மீன் வியாபாரம் மற்றும் விவசாயம் போன்றவற்றையும் இம் மக்கள் மேற்கொண்டு வருகின்றனர். ஒரு காலத்தில் இப்பிரதேசத்தில் இலங்கைக்குத் தேவையான மீன் மற்றும் கருவாடு போன்றவற்றை அதிகளவில் உற்பத்தி செய்த கடல் வளமும் கடற்தொழிலும் சிறப் புற்றிருந்தது. இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியில் மயிலிட்டி 30 வீதத்திற்கு அதிகமான மீன்களை 1970கள் மற்றும் 1980களில் உற்பத்தி செய்தது. இது இலங்கையின் இரண்டாவது பெரிய மீன்பிடித் துறைமுகமாக விளங்கியதும் குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாமல் தென் கிழக்குப் பருவப்பெயர்ச்சிக் காலப்பகுதியிலும் இத்துறை முகத்தைப் பயன்படுத்தமுடியும் என்பது இத்துறைமுகத்தின் சிறப்பம்சமாகும். ஆனால் 27 வருட இடப்பெயர்வுக்குப் பின் இம் மக்கள் நாளாந்த வாழ்க்கைச் செலவுக்குத் தேவையான வருமானத்தை மீன்பிடித்தொழிலின் மூலம் ஈட்ட முடியாதவர்களாக இருக்கிறார்கள். இன்று மீன் பிடித்தொழிலில் பாரிய சவால்களை இவர்கள் எதிர்கொள்கின்றனர்.

ஆளணிப் பற்றாக்குறை கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் மிக முக்கியமான சவாலாகும். இடப்பெயர்வின் பின் இந்த 27 வருடங்களில் பலர் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்துள்ளனர். சிலர் தாம் இடம்பெயர்ந்து இருந்த பிரதேசங்களிலேயே நிரந்தரமாக வாழத் தொடங்கியுள்ளனர். கல்வி, மருத்துவம் உட்பட மிக முக்கியமான அடிப்படை வசதிகள் இன்னும் வழங்கப்படாத நிலையில் பலர் சொந்த இடங்களுக்குத் திரும்பவில்லை. அதுமட்டுமல்லாமல் வலிகாமம் வடக்குக் காணிகள் விடுவிக்கப்பட்டதாக பெயரளவில் சொல்லிக் கொண்டாலும் இன்னும் விடுவிக்கப்படாமல் ஏராளமான காணிகள் முப்படைகள் மற்றும் பொலிஸாரால் பயன்படுத்தப்படுகின்றன. காணிகள் விடுவிக்கப்படாத மக்கள் இன்னும் ஏதிலிகளாக தான் வாழ்கின்றனர்.

"இராணுவத்தின் தயவில் தமது சொந்த மண்ணில் இந்த மக்கள் வாழத் தலைப்பட்டிருக்கிறார்கள்" என்கிறார் அருட்தந்தை தேவராஜ். வலிகாமம் வடக்கு மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அவர் குறிப்பிடுகையில் முற்று முழுதாகக் காணிகள் விடுவிக்கப்படாமையால் குறிப்பிட்டளவிலான மக்களே குறியேறியுள்ளனர். இளையவர்களுக்குத் கடற்றொழில் தெரியாது. இதனால் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான ஆளணிப் பற்றாக்குறையாகக் காணப்படுகிறது. இந்நிலையில் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் நவீனமயப்படுத்தப்படுகிறது. மீன் பிடிக்கும் மக்களை விடுதலை செய்யாது துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதில் பயனில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். 2018 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அவர்களால் மயிலிட்டி மீன் பி-

### மக்களுடன் காவலன்

டித்துறைமுகத்திற்கான பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத் துறைமுகம் 205 மில்லியன் ரூபா முதலீட்டில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

"கடற்றொழிலில் நாளாந்தம் 500 ரூபா வருமானம் வந்தால் போதும் என்ற நிலையில் தான் வாழ்கிறோம்" என்கிறார் ஊறணியில் வாழும் வயோதிபப் பெண்மணி ஒருவர். இன்றைய இம் மக்களது வாழ்கை நாளாந்த உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான போராட்டமாகவே இருக்கிறது.

ஊறணி அந்தோனியார் ஆலயம், பலாலி செபஸ்தியார் ஆலயம், மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயம் போன்றன 2013 இற்குப் பின்னர் இடித்தழிக்கப்பட்டிருக்கின்றன. 2009 ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அதன் பின் 2012 ஆம் ஆண்டு விசேட அனுமதி பெற்று இப்பிரதேசங்களைப் பார்வையிடவந்த மக்கள், இவ் ஆலயங்கள் அழிவுக்குட்படாதிருப்பதனை அவதானித்திருக்கிறார்கள். ஆனால் 2017 ஆம் ஆண்டு இப் பிரதேசங்களில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படும் போது, இந்த ஆலயங்கள் இருந்த இடம் தெரியாமல் இடித்தழிக்கப்பட்டிருந்தன. இவ் ஆலயங்கள் இன்னும் உரிய முறையில் புனரமைக்கப்படாது இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மீள்குடியேறிய பெரும்பாலான மக்கள் வீடு, காணி அற்ற நிலையில் தற்காலிக குடிசைகளில் வாழ்கிறார்கள். வீட்டுத்திட்டம் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே வழங்கப்படுகிறது. மலசலகூட வசதிகள் போதியளவில் இல்லை. அதுமட்டுமல்லாமல் அரசாங்கம் வழங்குகின்ற வாழ்வாதார உதவிகளிலும் பாரபட்சம் காட்டப்படுகின்றது. விதவைகளுக்கான வாழ்வாதார வசதிகள் உரிய முறையில் வழங்கப்படுவதில்லை.

"நான் தனியாள், எனக்கு ஒண்டுமேயில்ல, மலசலகூட வசதி கூட இல்லை. நான் தகர வீடொன்றில் வசிக்கிறேன்" என்கிறார் கணவனை இழந்த வயோதிபப் பெண்ணொருவர். இவர் மீன் தெரிதல் மூலம் சம்பாதிக்கும் பணத்தில் தனது நாளாந்த வாழ்க்கையை நகர்த்திச் செல்கிறார்.

மேலும் இப்பிரதேசங்களில் உள்ள பெண்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலே தமது நாளாந்த வாழ்க்கையைக் கொண்டுசெல்கிறார்கள். கடற்றொழில் செய்கின்ற குடும்பங்களில் மீன் தெரிதல், மீன் விற்றல் போன்றவற்றையும் குடும்பத்தையும் கவனிப்பவர்களாகப் பெண்களே இருக்கிறார்கள்.



அனுதர்ஷி லிங்கநாதன்
விரிவுரையாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்

கணவனை இழந்த நிலையில் தனது 16 வயது மகளுடன் சிறிய குடிசை ஒன்றில் வசிக்கும் திரேசம்மா தனது அன்றாட வாழ்வைக் கொண்டுசெல்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கிறார். மீன் தெரிதலைத் தனது வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டிருக்கும் இவர் தொழிலுக்குச் செல்லமுடியாத போது, திருமணமான மகள்களின் உதவியினாலேயே நாளாந்த உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதாகக் குறிப்பிட்டார். விதவைகள் மற்றும் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் பொருளாதார ரீதியில் வலுப்படுத்தப்படவேண்டும்.


இப்பிரதேசங்களில் மக்களின் காணிகளைப் பயன்படுத்தி, இராணுவம் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. இதுவும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் ஒரு விடயம் ஆகும். விவசாயம் செய்யக்கூடிய நீர் ஆதாரமுள்ள பகுதிகளை இராணுவம் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. இதன் மூலம் மக்களின் பொருளாதாரம் சிக்கலாக்கப்படுவதுடன் தொடர்ந்தும் அம் மக்களைப் பொருளாதார அடிமையாகவே வைத்திருக்க முயல்கின்றனர்.

இப்பகுதி மக்கள் எதிர்கொள்ளும் மற்றுமொரு சவால் பலாலி வீதியில் இராணுவ முகாம் இருப்பதால் பலாலி மக்களால் அதனைப் பயன்படுத்த முடியாதுள்ளது. பலாலி மக்கள் வைத்தியசாலை போன்ற அவசர தேவைகளுக்குக்கூட துாரம் கூடிய மாற்று வீதிகளையே பயன்படுத்த வேண்டியுள்ளது. பலாலி விமான நிலைய விஸ்தரிப்பிற்காகவும் மக்களின் காணிகளும் ஆலயங்களும் விடுவிக்கப்படாதுள்ளன.

இப்பிரதேசங்களில் இன்னும் வைத்தியசாலை, வங்கி, நூலகம் போன்ற அடிப்படை வசதிகள் இல்லை. ஆனால் 27 வருடங்களுக்கு முன் இவை இருந்திருக்கின்றன. உதாரணமாக மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை அன்று பிரபலமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ் வைத்தியசாலை இன்னும் புனரமைக்கப்படாது காணப்படுவதுடன் அரசால் கண்டுகொள்ளப்படாமல் இருக்கின்றமையைப் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். இன்று அதிகமான காசநோயாளர்களைக் கொண்ட யாழ் மாவட்டத்தில் காசநோய் வைத்தியசாலையின் தேவை உணரப்பட்டிருக்கிறது.

27 வருடம் ஏதிலிகளாக வாழ்ந்த இந்த மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளினூடாகப் பல அனுபவங்களைப் பெற்றிருக்கிறார்கள். முகாம் வாழ்க்கை, சாதி, சமூகப் பாரபட்சங்களில் இருந்து மக்களை மீட்டெடுத்து மக்கள் மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதுடன் சகவாழ்வுக்கு வழிசமைத்திருக்கிறது. அந்தக் காலத்தையும் இந்தக் காலத்தையும் ஒப்பிடும் போது. அப்போது நிறைய மக்கள் வாழ்ந்தார்கள். நிறையச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இன்றைய காலம் அவ்வாறல்ல. தற்போது செயற்பாடுகளை முன்னெடுப்பதில் நிறையத் தடைகள் இருக்கின்றன" என்கிறார் அருட்தந்தை தேவராஜன்.

இந்த மக்கள் இழந்த வாழ்க்கையை மீண்டும் பெற்றுக் கொள்ள முடியுமா? வறுமையின் பிடியில் வாழும் இம்மக்களுடைய வாழ்வு மேம்படுத்தப்படவேண்டும். 1990 களுக்கு முன்னர் இந்த மக்கள் எப்படி வாழ்ந்தார்களோ அந்தளவிற்கு மக்களின் வாழ்வு மேம்படுத்தல் காலத்தின் தேவையாகும்.




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி. செ. அன்புராசா அமதி**

(மல்லிகா, முல்லைத்தீவு)
**கேள்வி: குண்டுத் தாங்குதல்கள் நடந்த முறையைப் பார்க்கின்றபோது எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாகத் தான் முதுகில் கொழுவும் பையுடன் குண்டுகள் கொண்டு செல்லப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டுள்ளன. இப்போது அவ்வாறு கொழுவிக் கொண்டு வருபவர்களைப் பார்த்தால் அவர்களைக் கொல்லவேண்டும் போல இருக்கிறது. இப்பயத்தைப் போக்க என்ன செய்யலாம்?**
ப: அருமையான ஒரு திட்டம் இருக்கிறது மல்லிகா! காலத்திற்கேற்ப ஒரு பையினைப் புதிதாக ஓடர் கொடுத்துவிட்டால் இப்பிரச்சினையை இலகுவாகத் தீர்க்கலாம்! ஒருவர் 'ஒரு பை வேணும்' என ஓடர்கொடுக்கிறார்: "ஐயா பை ஒன்று தாங்கோ/ படு கறுப்பும் வேண்டாம்/ பஞ்சவர்ணத்திலும்வேண்டாம்/ பின்னுக்குக் கொழுவுறதும் வேண்டாம்/ பெரிதாயும் வேண்டாம்/ ஆகச் சிறிதாயும் வேண்டாம்/ ஆங்கிலம் அரபு/ எழுத்துப்போட்டதும் வேண்டாம்/ இழுத்துப் பூட்டுறதும் வேண்டாம்/ ஆக ஓவெண்டும் வேண்டாம்/ அப்பட்டமாய் உள்ளே எல்லாம்/ அம்பலத்தில் தெரியிற மாதிரி/ புட்டோ இடியப்பமோ/ போண்டாவோ இட்டலியோ/ கட்டிய பார்சலும்/ தட்டிப்பார்க்காமலே /தரணிக்கே தெரியும்படியாய்/ ஒரு தட்டி மறைப்பு இல்லாமல்/ குஞ்சம் கொடிகள் இல்லாமல்/ குறிகள் குற்றுக்கள்/ பறவைகள் மிருகங்கள் இல்லாமல்/ வெறுமனே ஒரு பை! திறந்து பார்க்காமல்/ கொடிகாமத்திலிருந்து பார்த்தால்/ கைதடி சந்தியில் கைப்பையின்/ அடியில் இருக்கின்ற/ அரை இஞ்சி ஊசியும்/ தெளிவுறக் காண்பதுவாய்/ ஐயா ஒருபைவேணும்/இல்லையெனில்/ தையல் கூலி ஒரு/ ஐந்து பத்து இலட்சம்/ ஆனாலும் பரவாயில்லை! உள்ளே இருப்பதை/ உலகமே பார்க்கும் படியாய்/ மெய்யாய் ஒரு பைவேணும்! இப்போதைக்கு இது போதும்/ இனியும் நாளை ஏதுமென்றால்/ எனக்கும் என் மனையாளுக்கும்/ பைபோல/ ஒரு கவுணும் காற்சட்டையும்/ தைத்து உதவ வேணும்! இனியாரும் குண்டை/ கொண்டைக்குள் காவி வந்தால்/ மறுநாள் மக்கள் அனைவருக்கும்/ மண்டை மட்டும்தான் இருக்கும்/ மசிர் இருக்காது/ இண்டைய நாட்டு நிலைமையில்/ இப்படித்தான் யோசிக்கவேணும்!" இப்பையைக் கண்டு பிடித்தவனுக்கு நன்றிகள் கோடி.

(கோட்டையான், யாழ்ப்பாணம்)
**கே: கொழும்புக் குண்டுவெடிப்பைத் தொடர்ந்து ஏறக்குறைய இருவாரங்களின் பின் நீர்கொழும்பில் இரு குழுக்களாக முஸ்லிம் சிங்களவர்களுக்கிடையில் கருத்து முரண்பாடு முற்றி சண்டை ஏற்பட்டு சில அசம்பாவி தங்கள் நடந்தபோது கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உடனடியகவே நீர்கொழும்புப் பள்ளிவாசலுக்குச் சென்று முஸ்லிம் பிரதிநிதிகளைச் சந்தித்திருக்கிறார். நல்ல விடயம்! ஆனால், தமிழர்களாகிய நாங்கள் முள்ளிவாக்காலில் மடிந்தபோது கொழும்புப் பேராயர் அவர்கள் எங்கிருந்தார்?**
ப: கொழும்பில்தான் இருந்தார் கோட்டையான்!...

(சாளினி, யாழ்ப்பாணம்)
**கே: உயிர்த்த ஞாயிறு தினத்தன்று வழிபாட்டில் பங்கேற்ற மக்களைக் குறிவைத்துத் தேவாலயங்களில் தொடர் குண்டுத் தாக்குதல்களை நடத்தி இத்தனை உயிர்கள் பறிக்கப் பட்டும் கிறிஸ்தவர்கள் நடந்து கொண்ட விதம் உண்மையில் மலைப் பைத் தருகிறதே!**
ப: உண்மைதான் சாளினி! காரணம், இக்குண்டுவெடிப்புகளின்பின் எந்தவொரு அசம்பாவிதத்திலும் ஈடுபடாமல் மிகுந்த பொறுமையோடும் பொறுப்புணர்வோடும் கிறிஸ்தவ மக்கள் நடந்துகொண்டவிதம் மலைப்பை ஏற்படுத்துகிறது. வாழும் கடவுளை நம்புகிறவர்கள் அல்லவா! அதனால்தான், அவர்கள் மிகமிகத் துயரமான நேரத்திலும் உள்ளத்தைத் துவைத்தெடுக்கும் சந்தர்ப்பத்திலும் மிகுந்த பொறுமையோடும் பொறுப்போடும் செயற்பட்டுள்ளார்கள். இதற்கு ஓர் ஆதாரமாக கொழும்புப் பேராயர் கருதினால் மல்கம் ரஞ்சித் இஸ்லாமிய நாடுகளின் தூதுவர்களை குண்டுவெடிப்பின் பின் சந்தித்த போது கூறுகையில், 'எம்மீது தாக்குதல் நடத்திய தரப்பினருக்காகவும் நாம் பிரார்த்தனை செய்வதோடு, இஸ்லாமிய மக்கள் மீது நாம் கைதூக்கி விடக்கூடாது' எனவும் அவர் தெரிவித்துள்ளதாக அறியமுடிகிறது. மேலும், மட்டக்களப்பு சீயோன் தேவாலயத் தலைமைப் போதகர் தம் மீது தாக்குதல் நடத்தியவர்களை மன்னிப்பதாகவும் அவர்களை நேசிப்பதாகவும் கூறியிருப்பது இங்கு ஆழ்ந்து நோக்கத்தக்கது. இத்தகைய பகைவரை மன்னிக்கும் மனப்பாங்கை, கிறிஸ்தவ மேய்ப்பர்களின் - கிறிஸ்தவ மக்களின் பலவீனமாகப் பார்க்காமல் பார்த்துக்கொள்வது அரசினதும் அனைத்து மக்களினதும் பொறுப்பும் கடனும் ஆகும்!

(ரதி, யாழ்ப்பாணம்)
**கே: இலங்கை நாடு பல அழிவுகளைத் தொடர்ந்து சந்தித்துவிட்டது. இவ்வாறு அழிவுகள் தொடர்ந்தால் இந்த நாடு உருப்படுவதற்கு வழி இருக்கிறதா?**
ப: இருக்கிறது அதேவேளை இல்லை! இனத் தீவிரவாதத்தையும் மதத் தீவிரவாதத்தையும் ஒழித்தால் வழியுண்டு! இனத் தீவிரவாதத்தையும் மதத் தீவிரவாதத்தையும் வளர்த்தால் வழியில்லை!

(சசி, வவுனியா)
**கே: எமது ஆலயங்களில் குண்டு வெடிப்பு அசம்பாவிதங்கள் இனி மேல் இடம்பெறாதிருக்க என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்?**
ப: சசி, ஆலயங்களில் மட்டுமல்ல மக்கள் அதிகம் கூடும் பொது இடங்களான பாடசாலை, பேருந்து புகையிரத நிலையங்கள், சந்தை போன்ற இடங்களில் பாதுகாப்பு ஒழுங்குகளைக் கட்டாயமாக மேற்கொள்வது மிகமிக அவசியமானது. சந்தேகத்திற்கு இடமான நபர்கள், பொருட்கள், பொதிகள், வாகனங்கள் போன்றவைகள் குறித்து மிக விழிப்பாக இருப்பது இன்றியமையாதது. மேலும், பொலிஸ் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமைகளை ஆற்றினாலும் ஒவ்வொரு ஆலயத்திலும் பாடசாலையிலும் அவ்வவ் இடங்களுக்குரிய வகையில் பாதுகாப்பு ஒழுங்குகளை அலட்சியம் செய்யாது, தொடர்ந்து மிகக் கவனமாக மேற்கொள்வது அத்தியாவசியமானது. என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.

(விஜி, வவுனியா)
**கே: கொழும்பு மறைமாவட்டப் பேராயர் மேதகு கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களுக்குக் குண்டு துளைக்காத காரினை அரசு கொடுக்கிறது என ஊடகங்களில் செய்தி வந்ததே. அதற்கு என்ன நடந்தது?**
ப: ஆண்டகை அவர்கள் அக்குண்டு துளைக்காத காரினை நிராகரித்ததோடு, "இறைவனே எனது பாதுகாவலன். குண்டு துளைக்காத வாகனம் எனக்குத் தேவையில்லை. மக்களுக்கான பாதுகாப்பே எனக்குத் தேவை!" என ஊடகங்களுக்குக் கருத்துரைக்கிருக்கிறார் பாராட்டத்தக்க பதிலும் தீர்க்கமான தீர்மானமும்!

(கண்ணன், மன்னார்)
**கேள்வி: ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் களஞ்சியம் என நம்பப்படும் இடத்தில் பெருந்தொகையான கர்ப்பத்தடை மாத்திரைகள், போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதன் பின்னணியில் உள்ள திட்டமென்ன?**
ப: தங்களைச் சாராத இன மக்களைத் தொகையில் வளரவிடாமல் செய்வதும் எதிர்காலத்தில்படிப்படியாகத் தம்மினத்தின் ஆதிக்கத்தினை உயர்த்துவதும் இதன் பின்னால் உள்ள திட்டம்போல் தோன்றுகிறது. கைப்பற்றப்பட்ட மாத்திரைகளைப் பற்றிக் கூறப்படுகிற தகவல்கள் திடுக்கிட வைக்கின்றன! உணவுப்பொதிகளில் குறிப்பாக கொத்துறொட்டி, பால் தேனீர் போன்றவற்றில் கலந்து கொடுத்த சந்தேகத்திற்கிடமான சம்பவங்கள் கடந்த சில ஆண்டுகளாக ஆங்காங்கே தெரிவிக்கப் பட்டவையே. கைப்பற்றப்பட்ட மாத்திரைகளைப்பற்றிச் சொல்லப்படும் செய்திகளை வைத்துப் பார்க்கும்போது ஏற்கனவே நடந்ததாகச் கூறப்படும் சந்தேகத்திற்கிடமான சம்பவங்களை அடியோடு நிராகரித்துவிட முடியாது! காரணம், மேற்சொன்னவர்கள் மக்களை அழிப்பதற்கு மக்களின் வழிபாட்டு இடங்களில் வெடிகுண்டாக மாறத்துணிகிறார்கள் என்றால், தங்களைச் சாராத இனத்தினரை அழிக்க இவ்வாறான பயங்கரமான திட்டங்களை வகுத்திருக்கக்கூடிய ஏதுநிலைகள் இருப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. எனவேதான், கண்டகண்ட கடைகளில் சாப்பிடுவது, கண்டகண்ட இடங்களில் தேனீர் குடிப்பது, கண்டகண்ட இடங்களில் உணவுகளை வாங்கி உண்பது போன்ற பழக்கங்களை அடியோடு நிறுத்திக்கொள்வதன் ஊடாக இப்பேராபத்துக்களைத் தவிர்க்கலாம்!

(J .B. யூட் மரியசெல்வம், சுன்னாகம்)
**கே: ஆலயங்களில் அனைவரையும் எவ்வித வேறுபாடுகள் இன்றி முழு உரிமையோடு உள்வாங்குவதும், எல்லா மக்களிடையேயும் சமத்துவம் பேணுவதும் அவசியம் என 19.03.2019 அன்று யாழ்.மறை மாவட்டத்தின் மேய்ப்புப்பணி மாநாட்டு மீளாய்வுக் கூட்டத்தில் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. திரும்பத் திரும்பச் சொன்னாலும் இவைகள் திருந்து வினமா?**
ப: நேர்மையோடும் மனத்தூய்மையோடும் சகோதர அன்போடும் இவ்விடயத்தினை அனைவரும் அணுகினால் சமத்துவம் சாத்தியப்படும். இவ்விடயத்தின் வெற்றி எம் மனங்களைப் பொறுத்தது. மனம் இருந்தால் எல்லாவற்றுக்கும் இடம் இருக்கும். கடந்த காலங்களில் இராணுவம் விட்டுக் கலைத்தபோது, ஒவ்வொரு இடமாக இடம்பெயர்ந்து, கையில் கிடைப்பதை எடுத்துக்கொண்டு ஓடியோடிச் சென்றபோது, இச்சமத்துவம் ஆலயங்களில் மட்டுமல்ல நாளாந்த வாழ்விலும் சாத்தியமாகத்தான் இருந்தது! ஆனால், மீண்டும் சொந்த இடம் திரும்பி எமது வீடுகளில் குடியிருக்கத் தொடங்கியபோதுதான் 'தற்காலிகக் கொட்டகை' போல அது 'தற்காலிக சமத்துவம்' எனப் புரிந்தது! உதாரணமாக, அவர்கள் கொத்துக் குண்டுபோட்டுக் கொன்ற போதும், இவர்கள் குண்டுவைத்துக் கொல்கிறபோதும் 'அடக்கம் செய்வதில்' சமத்துவத்தைக் கைக்கொள்வோம்! அதன் பின் கொஞ்சக் காலம்போக வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொள்கிற நிலையாகிவிடுகிறது! அனேகமான விடயங்களில் இதுதான் இன்றைய நம்நிலை! இது இவ்வாறிருக்கையில் 'திரும்பத் திரும்பச் சொன்னாலும் திருந்துவினமா?' எனக் கேட்கிறீர்கள்! சொல்லிக் கேட்காத படியால்தான் திரும்பத் திரும்பச் சொல்லவேண்டியிருக்கிறது யூட்!

(ரதன், மானிப்பாய்)
**கே: 'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாவிடில்நாடு பாரிய விளைவுகளைச் சந்திக்கும்!' என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் சில வாரங்களுக்கு முன் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளாரே! என்னாகுமோ?**
வ: மாறன் பயப்படாதீர்கள், ஒன்றும் ஆகாது! இவர் கூற்றுக்கு ஒன்றும் வேகாது! இது எப்படியென்றால், தலையை மறைத்துத் துண்டொன்றைப் போட்டுக்கொண்டு அப்பன் பிள்ளையைப் பயமுறுத்துவது போன்றது! தன்னைப் பயமுறுத்துவது தன் அப்பன்தான் என்று பிள்ளைக்குத் தெரிந்திருப்பதால் பிள்ளை வாய்விட்டுச் சிரிக்கிறது. இக்குழந்தையைப் போலத் தான்இவரின்தற்போதையகருத்துக்களைப் பார்த்து சாதாரண மக்கள்கூடச் சிரிக்கிறார்கள்!

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

உங்கள் கேள்விகளை, பெயர், முகவரியுடன் குறிப்பிட்டு, 'என் கேள்விக்கென்ன பதில்', 'அமைதித்தென்றல்', உண்ணாப்புலவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கோ, anpuomi1970@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ, அல்லது 0778 648 548 என்ற எண்ணுக்கு sms, viber அல்லது whatsupக்கோ அனுப்பி வைக்கலாம்.

## தோல்வியைக் கொண்டாடுங்கள்



'உழுத நிலத்திற்குத்தான் உற்பத்தி அதிகம், அழுத மனத்திற்குத்தான் ஆற்றல் அதிகம்" என்பார்கள். வாழச் சொல்லித் தருவதும், வாழ்க்கையைச் சொல்லித் தருவதும் தோல்விகளே! இவைகள் நம்மை ஆமணக்கு வித்தாகப் பிழிந்து வரலாற்றில் ஆழ்கடல் முத்தாக மிளிரச் செய்கிறது. ஒலிம்பிக் இறுதிப் போட்டியில் தோல்வியைத் தழுவியவனுக்குத் தான் வெற்றியின் அருமையும், பெருமையும் தெரியும். எனவே தோல்விகள் தான் நம்மைச் செதுக்கும் கருவிகள். எரிந்த சாம்பலிலும் வலிமை பெறுகிறது பீனிக்ஸ் பறவை. தோல்வியும் எழுவதற்கான வலிமைதானே! ஒவ்வொரு முறை நீங்கள் தோற்கும் போதும் வெற்றிக்கான இன்னொரு பாடத்தைக் கற்கிறீர்கள். வெற்றி அருகில் உள்ளது எனத்- தோல்வியைக் கொண்டாடுங்கள்





# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை

## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

அருட்பணி S.V.B. மங்களராஜா

(சென்ற இதழ் தொடர்ச்சி...)

**ஆயர் செமேரியாவின் (கல்வி சம்பந்தமான) அருட்பணி மடல் (தொடர்ச்சி...)**

8. 1842ம் ஆண்டு அரசு தமது அங்கிலிக்கன் மற்றும் புரட்டஸ்தாந்து சபையினர் நடாத்தும் பாடசாலைகளுக்கு நிதியுதவி ஒதுக்கி வந்தமை நீங்கள் அறிந்ததே. 1848ம் ஆண்டு அரசின் தாராள செயற்பாட்டைப் பயன்படுத்தி நாமும் யாழ்ப்பாணத்திலுள்ள எங்களது ஆங்கில ஆண்கள் மற்றும் பெண்கள் பாடசாலைகளுக்காக வருடாந்தம் 150 பவுண்கள் நிதியுதவி பெறுவதில் வெற்றி கண்டோம். எனக்கு முன் திருத்தூது முதல்வராயிருந்த ஆயர் பெற்றக்கீனி ஆண்டகையால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலைகள் கடந்து வந்த மேடு பள்ளங்களைப் பற்றி நான் குறிப்பிட விரும்பவில்லை. தகுதியுள்ள தராதரங்களைக் கொண்ட ஆசிரியர்களின் பற்றாக்குறை, போதிய ளவு கத்தோலிக்க பாட நூல்களை எடுப்பதில் உள்ள சிரமங்கள் போன்ற காரணிகள் இப்பாடசாலைகள் சுமூகமாகவும், திறமையாகவும் செயற்படத் தடைகளாகவுள்ளன.

9. பெண்கள் பாடசாலையைப் பொறுத்தளவில் அதன் தலைமை ஆசிரியையின் (திருமதி பிளனகள்) (Mrs. Flanagan) தனிப்பட்ட திறமையினாலும், பணியார்வத்தாலும் பல குறைபாடுகள் ஈடுசெய்யப்பட்டன எனலாம். இவருடைய பொறுப்புணர்ச்சியும், தியாக மனப்பான்மையும் இப்பாடசாலை பல சவால்கள் மத்தியிலும் யாழ்ப்பாணத்தில் இயங்கும் பெண்கள் பாடசாலைகளுள் மிகச்சிறந்ததாக உள்ளது என்பதைப் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

இப்பெண்ணின் இன்னுமொரு சிறப்பான பணி ஒரு மாணவியர் விடுதியையும் அத்துடன் அனாதைப்பிள்ளைகளது விடுதியையும் இயக்கியமையாகும். ஐரோப்பியர்களுடைய பிள்ளைகளும், சுதேச பிள்ளைகளும் பல வருடங்கள் இந்தப் பெண்மணியின் அன்னைக்குரிய அன்பிலும் அரவணைப்பிலும் வளர்ந்து பயன் பெற்றனர். இந்நிறுவனங்களின் செயற்பாடு உண்மையில் மிகவும் பெறுமதி மிக்கதாய் இருந்தாலும் ஆரம்ப நிலையில் இவை பல குறைபாடுகளுடனேயே இருந்தமையையும் குறிப்பிட வேண்டும். குறிப்பாக ஒரு இளையோர் உருவாக்கத்திற்கான தேவைகள், மற்றும் காலப் போக்கில் ஏற்படக்கூடிய அத்தியாவசியத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டன என்று கூறமுடியாது. ஒரு உயரிய குறிக்கோளை அடையப் பாடுபடவேண்டும். கல்விக்கான ஒரு பொதுப்பாடத்திட்டம் பல விடயங்களையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். எங்களுடைய பாடசாலைகள் சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி நீடித்து நிற்கக்கூடிய பலன்களைக் கொடுக்க வேண்டுமானால் மேற்குறிப்பிட்ட விடயங்கள் கவனிக்கப்படல் வேண்டும்.

10. யாழ்நகரில் உள்ள பாடசாலைகளை விட பல ஆரம்பப் பாடசாலைகள் எனது திருத்தூது மாவட்டத்தின் பல்வேறு இடங்களில், இவற்றுள் பல சுதேச மொழிப்பாடசாலைகளாகளான (தமிழ்) சில ஆங்கிலப் பாடசாலைகளும் உள்ளன. இவற்றை நான் தொடர்ந்து பராமரித்து வருகின்றேன். இப்பாடசாலைகளில் 1000க்கு மேற்பட்ட மாணவர்கள் ஆரம்பக்கல்வியைப் பெற்று வருகிறார்கள். இப்பாடசாலைகள் பயன் தரும் பணிகளை ஆற்றி வந்தாலும் இவற்றை இன்னும் கூடுதலான வினைத்திறன் உள்ளதாக ஆக்குவதற்கு இன்னும் பல முன்னேற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

11. ஆயினும் முழுத்திருத்தூது மாவட்டத்திலும் யாழ்ப்பாணம் முக்கியமான நகராக இருப்பதனாலும், அத்துடன் தொடர்புள்ள வேறு பல காரணங்களாலும் யாழ்ப்பாணத்திற்கு மிக முக்கிய இடம் கொடுக்கப்படவேண்டுமென்பது எனது கருத்தாகும். யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளை முன்னேற்றுவதன் வழியாக இதர பாடசாலைகளின் முன்னேற்றத்திற்கான அடித்தளத்தை நான் இடுவதாக உணர்கின்றேன். திருத்தூது மாவட்டம் முழுவதினதும் பாடசாலைகள் கட்டமைப்பில் யாழ்ப்பாணமே மையமாகவும், வருங்கால பாடசாலைகளது மாதிரியாகவும் விளங்குகின்றது. எனவே தான் யாழ்ப்பாண நகரப் பாடசாலைகளுக்கு எனது முதன்மையானதும், முக்கியமானதுமான கவனத்தைச் செலுத்துவது புரிந்து கொள்ளப்படவேண்டும்.

12. முதலில் ஆண்கள் பாடசாலையைப் பொறுத்தளவில், பெற்றோர் அடிக்கடி தங்கள் ஆண்பிள்ளைகளை விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களாகச் சேர்க்க விண்ணப்பித்ததன் பின்னணியில் அவர்கள் தமது ஆசிரியர்களின் நேரடியானதும், தொடர்ச்சியானதுமான கண்காணிப்பிலும் கல்வியைப் பெறமுடியும் எனக்கருதுகின்றேன். எனவே பகல் பாடசாலையுடன் சேர்ந்து ஒரு தங்கிப் படிக்கும் விடுதியையும் ஏற்படுத்த முயன்றேன். இதுவரையில் இந்தப் பரீட்சார்த்த முறை பயனளிப்பதாயுள்ளது.

13. ஆனால் இம்முதற்தரமான நடவடிக்கைகளுக்கு இன்னும் பல முன்னேற்றங்கள் செய்யப்பட்டேயாகவேண்டும். விசாலமான நிலப்பகுதி, திறமையான ஆசிரியர்கள், போதுமானளவு பாடசாலை உபகரணங்கள், நூல்கள் ஆகியவை கட்டாயம் தேவை. இவையின்றி உண்மையான வளர்ச்சியைக் காண முடியாது.


14. போதியளவு வகுப்பறைகள், மற்றும் அறைகள், விடுதி மாணவர்களுக்கான தங்குமிட வசதிகள்.. இவற்றுள் சில ஏற்கெனவே கட்டிமுடிக்கப்பட்டு இன்னும் சில கட்டப்பட்டுகொண்டிருப்பதுடன், வளர்ந்து வரும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மேற்குறிப்பிடப்பட்ட வசதிகள் இன்னும் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். (தொடரும்....)



## உயிர்ப்பில் திர்ந்த பூக்கள்

எ. ஜெனாத்
நாவாந்துறை
புனித பரலோக அன்னை ஆலயம்.

ஈழத் தாய் நிலமே
இன்னும் என்ன தாகமோ?
இறுதிப் போரின் குருதி போதாது
மீண்டும் தகனமெடுத்தாயோ?
சுனாமியாய் வெள்ளப் பெருக்காய்
கொன்று தின்றொழித்தும்
இன்னும் பிணப்பசியடங்கா
புதை நிலமே!
இன வெறிக் குண்டுகள்
நிசப்தத்தில் புதைந்திட
சற்றே மூச்செடுத்து நிமிர்ந்தோம்
மத வெறிக் குண்டுகள் உன் பசியாற்ற
பிணங்கள் குவித்தனவோ?
உயிர்ப்புத் திருவிழாவில்
சிலுவை முற்றமதில்
கனவுகள் விரித்து கரங்கள் குவித்து
உயிர்த்த இயேசுவிடம்
வரமென்ன வேண்டினரோ?
உடன் உதிரப் போவதை அறியாத பூக்கள்
புன்னகையின் இடத்தை
முள்முடிகள் ஆக்கிரமிக்க
சிலுவை மரத்தின் வேர்கள் குருதி குடித்து
உலகெல்லாம் கிளை விடுகிறது
கொடியவரே உம் கொள்கையென்ன?
மதவெறியில் வெடித்தீரானால்
எந்தத் தெய்வம் உரிமை கோரும்
மனிதமற்ற உம் வெறித் தாக்குதலை?
இருண்ட வானில் பருந்துகள் சுழல்கின்றன
இனவாதப் பற்களால் எமை விழுங்கிய பூதங்கள்
தேசியம் பேசி படலையில் காவலிருக்கின்றன
மீண்டும் 'டுமீர் டுமீர்' சத்தம்
மீண்டும் ஊரடங்குச் சட்டம்
தேசத்தின் 'நிம்மதி'
சிலுவையில் தொங்குகிறது
கிறிஸ்து உயிர்த்து விட்டார்
மனிதம் உயிர்ப்பதெப்போ?



## விதை சொன்ன கதை ஒன்று

மண்ணில் புதைந்திருந்தோம்
எம்மை மறந்திருந்தோம்
எம் மேல் விழும் ஓர் துளியின்
வரவுக்காய் காத்திருந்தோம்!

துளியின் வரவு தன்னால்
உயிரை உணர்ந்து விட்டோம்
உறங்கி கிடந்த நாங்கள்
உறக்கம் தொலைத்து விட்டோம்!

மண்ணோடு போராடினோம்
விண்ணோடு கதை பேசினோம்
வெகுவாக வளர்ந்தோங்கினோம்
இன்று விறகாகி உடல் காய்கிறோம்!

- சித்தாத்தன்

## ஒரு தாய்.. ஒரு சேய்..

ஒரு தாய்
தலை குனிகிறாள்
தன்
நான்காம்
பிள்ளையின்
செயல் கண்டு
வெட்கித்து
வெந்தழுது..

பத்துமாதம்
சுமந்தவள்,
நான்கு பிள்ளையைப்
பெற்றவள்,
நானிலம் போற்ற
வளர்த்தவள் - தன்
நான்காம் பிள்ளைக்காய்
தலை குனிகிறாள்....

அன்பை
அறிவை
அனுபவத்தை
ஆரோக்கியத்தை
அள்ளிக்கொடுத்து
இன்று
அந்தப் பிள்ளையால்
அநாதையானாள்....

மூத்தவள்
முனைவராக
இளையவன்
இஞ்சினியராக
அடுத்தவள்
அட்வகேற்றாக
அந்தப்பிள்ளையை.....

அவள்
ஒரே தட்டில்
நான்கு பேரையும்
அளந்தவள்....
ஒரே
பொட்டில்
நான்கு பேரையும்
வளர்த்தவள்...

அவள்
அகங்கள்
ஒருபோதும்
கறுப்பைப்
பேசியதில்லை..
அவள்
ஆகமங்கள்
ஒருபோதும்
சிவப்பைக் கொடுத்ததில்லை...

அவள்
இரும்புகள் பற்றி
இச்சித்தேனும்
கதைத்ததில்லை...
அவள்
இறப்புக்கள் பற்றி
கனவில் கூட
நினைத்ததில்லை...

சாம்பல் மேடுகளில்
பீனிக்ஸ் பறவையை
சரித்து விழுத்திய
அந்த நிமிடமே
அவள்
தலை குனிந்தாள்
நிமிர
இயலாதவளாய்....

அவள்
வாழ்வின் பக்கங்கள்
அன்பை
அகிம்சையை
அர்ப்பணிப்புக்களை
அமைதியையே
அதிகம் பேசுகின்றன

யார்
எத்தனை முறை
வெறுத்தாலும்
அந்த
வழி தவறிய
ஆடும்
அவளின்
ஒரு பிள்ளைதான்.....

சட்டத்தரணி
ஜெனிபர் மதுரநாயகம்

## காவலன் கலசம்

# நவ மறைசாட்சியரும் நவீன குண்டுத்தாக்குதல்களும்

அருட்பணி ஸ்ரனி அன்ரனி அ.ம.தி



அண்மையில் கொழும்பில் அரங்கேறிய கிறிஸ்தவர்கள் மீதான தற்கொலைத் தாக்குதல்களும் அதனால் ஏற்பட்ட உயிரிழப்புக்களும் காலத்தால் அழியாத வரலாற்று வடுக்கள் என்பதை மறுக்க முடியாது. இலங்கை தேசத்தில் பிரிவினைச் சகோதரர்களுடைய சபைக் கூடங்களும் ஆலயங்களும் தீவிர பௌத்தவாத சிந்தனையுடையவர்களால் சிறிதளவில் தாக்கப்பட்டு வந்ததை நாம் அறிந்திருக்கின்றோம். முதன் முதலாக கத்தோலிக்க ஆலயங்கள் மீதான தாக்குதல்களும் உயிரிழப்புக்களும் எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியதில் இரு கருத்து இருக்க முடியாது. ஏன் கிறிஸ்தவ ஆலயங்கள் அதுவும் இயேசுவின் உயிர்ப்பு விழாத் திருப்பலியில் பங்கு கொண்ட மக்கள் தாக்கப்பட்டதற்கு பல காரணங்களை நாம் கண்டுபிடிக்கலாம். பல காரணங்களும் எமக்கு அறியத்தரப்படலாம். அதைத் தாண்டி இத்துன்பியல் நிகழ்வு மூலம் கடவுள் வெளிப்படுத்தும் செய்தியை கோடிட்டுக்காட்டுவதே இச்சிறிய கட்டுரையின் நோக்கமாகும். இதனால் உயிரிழப்புக்களையும் அதன் வலிகளையும் குறைவாக மதிப்பிடுவது எமது நோக்கமல்ல என்பதை முதலில் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகும்.

### திருச்சபையின் வரலாற்றுப்பார்வையில்

திருச்சபையின் வரலாற்றை குருதி தோய்ந்த வரலாறு என்று கூடச் சொல்லலாம், குறிப்பாக உரோமைய பேரரசு நீரோ மன்னன் காலத்து வேத கலாபனைகளால் குருதி சிந்தி விசுவாசத்திற்காக சாட்சியம் பகர்ந்த மறைசாட்சியரை வரலாறு சந்தித்திருக்கின்றது. இத்திருச்சபையின் முதல் மறைசாட்சியராக புனித முடியப்பரை திருத்தூதர்பணி நூலில் பார்க்கின்றோம். இன்றும் எத்தனையோ புனிதர்கள் நற்செய்திக்காக குருதி சிந்தி விசுவாசத்திற்கு உரம் சேர்த்து இயேசுவை பெருமைப்படுத்தியுள்ளனர்.

விசுவாசத்திற்கு குருதி சிந்தி சாட்சியம் பகர்தல் என்பது திருச்சபைக்கு பரிச்சயமான வரலாறு என்று கூறலாம். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இன்றும் எத்தனையோ மறைசாட்சியர் இரத்தம் சிந்தி இயேசுவிற்கும் நற்செய்திக்கும் தங்கள் நம்பிக்கைக்கும் சாட்சியம் பகர்ந்து வாழும் புனிதர்களாகின்றனர் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த பின்புலத்தில் கொழும்பிலும் மட்டக்களப்பிலும் உயிர்ப்பு வழிபாட்டில் கலந்த வேளையில் தற்கொலை குண்டுத்தாக்குதல்களால் இறந்தவர்களும் இலங்கையின் நவ மறைசாட்சியராக பறைசாற்றப்பட வேண்டியவர்கள் என்பதை மறுக்க முடியாது . இவர்களும் தங்கள் நம்பிக்கையை பறைசாற்றவே உயிர்ப்பு விழாவில் கலந்து இயேசுவின் உயிர்ப்பை பகிரங்கமாக அறிக்கையிட்டு மடிந்தவர்கள். எனவே இவர்களும் வணக்கத்திற்குரியவர்கள் என்று உறுதியாக நாம் சொல்ல முடியும். இது எம் விசுவாசத்திற்கு உரம் சேர்க்கின்றது. புதிய நம்பிக்கையை கொடுக்கின்றது. இவர்கள் இயேசுவிற்கு தங்கள் குருதியால் சாட்சி பகர்ந்து இயேசுவை மகிமைப்படுத்தி அவரது உயிர்ப்பின் மகிமையிலும் பங்கு பெற்றுள்ளனர் என்பது சொல்லொண்ணா துயரத்திலும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாகும். எனவே தான் இவர்கள் தனித்துவமான முறையில் புதியதொரு நிலம் வாங்கப்பட்டு அங்கே இவர்களின் மகிமை பெறும் உடல்களும் எச்சங்களும் விதைக்கப்பட்டுள்ளன என்பதை அறிகின்றோம்.

### எமது நம்பிக்கை வாழ்வு புதுப்பிக்கப்படுமா?

இன்றைய நவீனத்துவ சவால்களால் (Post – Modernism) எமது நம்பிக்கை வாழ்வு நலிந்து, தளர்ந்து போயுள்ளதை நாம் மறுக்க முடியாது. நுகர்வு கலாசாரமும் தொடர்பாடல் சாதனங்களின் ஆக்கிரமிப்பும் எமது தனிப்பட்ட வாழ்வை, குடும்ப வாழ்வை, சமூக வாழ்வை பாதித்துள்ளது என்பது கசப்பான உண்மையாகும். இன்றும் திருஅவையும் சடங்கு திருஅவையாகவே (Cultic) நோக்கப்படுவது தவிர்க்க முடியாததாகும். ஆலயப் பாரம்பரியங்களையும், ஆலயத் திருவிழாக்களையும் மையப்படுத்தியதாகவே கிறிஸ்தவ வாழ்வு தொடர்ந்து பயணிக்கின்றது என்பதில் இருகருத்து இருக்க முடியாது. இன்றைய நெருக்கீடுகளால் பூட்டப்பட்ட ஆலய வாயில்கள், கடவுளுக்கும் பாதுகாப்பு என்பதும், வழிபாடுகள் குறைக்கப்பட்டதும்எமது கிறிஸ்தவ வாழ்வை சீர்தூக்கி பார்க்கவும் அறைகூவல் விடுக்கின்றது. வெறும் வழிபாடுகளும், ஆடம்பரம் நிறைந்த திருவிழாக்களும் மட்டும் எம் ஆன்மீகத்தை விசுவாசத்தை ஆழப்படுத்த முடியாது என்பதை கடவுள் வெளிப்படுத்தும் செய்தியாக இங்கு நோக்க வேண்டியவர்களாகின்றோம். வழிபாடுகளால் மட்டும் ஆண்டவனை திருப்திப்படுத்தி நாம் பக்தர்களாக மட்டும் வாழ்ந்து விட முடியாது: சீடர்களாக வாழ வேண்டிய தேவையையும் இத்துன்பியல் நிகழ்வுகளினூடாக இறைவன் வெளிப்படுத்த முனைகின்றாரோ என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எப்போதுமே திருச்சபை வரலாற்றில் ஏற்பட்ட நெருக்கீடுகள் எல்லாம் ஒரு புதுப்பித்தலுக்கான, அடிப்படை மாற்றத்திற்கான விசுவாச வாழ்விற்கே வித்திட்டது என்று கூறலாம். இன்றைய எமது மேலோட்டமான சாரமில்லாத, சாட்சியமில்லாத வாழ்வையும் சிந்தித்துப் பார்த்து மனம்மாற இந்த மறைசாட்சியருடைய மடிவுகள் எமக்கு அறைகூவல் விடுக்கின்றன என்பதை கருத்திற் கொள்வது அவசியமாகும்.

இன்றும் மந்தைகளுக்கு வழிகாட்ட வேண்டிய திருநிலையினரும் தங்கள் வாழ்க்கை முறைகளை சீர்தூக்கி சாட்சியமுள்ள எளிமையான வாழ்க்கை முறைக்கு திரும்புவதற்கான புதுப்பித்துலுக்கும் அறைகூவல் விடுப்பதாக நவமறைசாட்சியரின் இறப்புக்கள் எடுத்தியம்புகின்றன. இந்த மறைசாட்சியர் சிந்திய குருதி வீண்போகாதவாறு நாம் ஆன்மீகவாழ்வைப்புதுப்பித்துசெபத்தாலும்தபத்தாலும் பிறரன்பாலும் சாட்சியம் பகர்ந்து வாழ வேண்டிய தேவைக்கு இன்று தள்ளப்பட்டுள்ளோம் என்பதை மறுக்க முடியாது. அன்று பங்குத்திருச்சபைகளில் ஓரமாய் ஒதுங்கி (Periphery) வாழ்வர்கள் விசுவாச ஆழம் பெற்று மீண்டும் இயேசுவில் நிலைவாழ்வைக் கண்டிட மறைசாட்சியரின் குருதி வழிசமைக்கும் என்பதும் எமது நம்பிக்கையாகும்.

### வரலாறு மீண்டும் திரும்புமா?

இன்று தமிழ் கிறிஸ்தவர்களைப் பொறுத்தமட்டில் கிறிஸ்தவ வாழ்வு இன்றைய சமூகத்தீமைகளினால் நெருக்கீட்டிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. எமது பிரதேசங்களில் நிலவும் வாள்வெட்டுக்கள் போதைவஸ்து. ஒழுக்க வாழ்விற்கான சவால்கள் ஆன்மீகத்திற்கு சவாலாக இருந்து வருகின்றது. இன்று கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் பங்குத் திருச்சபைகளில் பார்வையாளர்களாகவே (Passive) இருந்து வருகின்றனர்.

ஞாயிற்றுக் கிறிஸ்தவர்களாகவே பெரும்பாலானவர்கள் மாறிவிட்டார்கள். திருத்தூதர் பவுல் கூறுவது போன்று கடவுளை விட சிற்றின்பத்தையே தேடுகின்ற உலகத்தில் வாழுவது போல் வாழ்க்கை முறைகள் மாறிவிட்டன. வழிபாடுகளும், ஆடம்பரமான திருவிழாக்களும் ஆலயத்தை மையப்படுத்தி (Church Centered) திருஅவையாகவேமாற்றிவிட்டது. எப்போது இறைமக்களைமையப்படுத்திய திருஅவையாக மாறிப்போகின்றது. இன்றைய நவமறைசாட்சியரின் குருதியினால் மீண்டும் நாம் நம் விசுவாச வேர்களுக்கு திரும்பி இறைவனைப்பற்றிக் கொண்டு விசுவாச வாழ்விற்கு சாட்சியம் பகரும் வாழ்விற்கு திரும்ப இந்த மறைசாட்சியரின் மரணங்கள் வழிசமைக்குமா என்பதை சிந்தித்து பார்க்க வேண்டிய காலகட்டத்தில் நிற்கின்றோம். திருச்சபையும் அதன் அமைப்புக்களை ஆழப்படுத்துவதை விட்டுவிட்டு இறைமக்களை இன்றைய சமூகச் சவால்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் எளிமையான சாட்சியமான வழிகளில் புதுப்பிக்கும் செற்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுக்க வழிகாட்டுவதே இன்றைய தாக்குதல்கள் மூலமாக இறைவன் விடுக்கும் செய்தியாகும் திருச்சபையும் தன் வெற்றிகரமான (Triumphalism) பிரமாண்டமான ஒழுங்கமைப்பை (Uniformity) மையப்படுத்திய மாயைகளிலிருந்து விடுபட்டு இயேசுவின் மனநிலையில் ஏழ்மையான (Poor) திருஅவையாக மாற ஆவன செய்யவும் இன்றைய துன்பியல் நிகழ்வுகள் அறைகூவல் விடுக்கின்றது. திரு அவையை தெருவிற்கு கொண்டு செல்லும் அன்பியங்கள் இன்றும் ஆழப்படுத்தப்பட்டு சாட்சியமான வாழ்விற்கு இறைமக்களை இட்டுச் செல்வதே இன்றைய எமது நவ மறைசாட்சியருக்கு நாம் செலுத்துகின்ற நன்றியாக அமையும் மீண்டும் எமது குடும்பங்களில் செபமும் தபமும் பெருக, சீரியல்களாலும், கைபேசிகளாலும் சீரழிந்துபோன எம் வாழ்வை கழுவி புனிதப் படுத்தவேமறைசாட்சியர் குருதி சிந்தி எம் விசுவாசத்தை புதுப்பிக்க அழைப்பு விடுத்துள்ளனர். என்பதை இங்கு சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியமாகும். நவ அறைசாட்சியரின் மரணங்களிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் என்ன? இவை வெறும் கணக்குகளாக (Score) நோக்கப்படாமல் எம் கிறிஸ்தவ வாழ்வை சீர்தூக்கி பார்த்து மனம்மாற வழிசமைக்க வேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பாகும். ●

## ‘காவலன்’ வாசகனின் பேனாவிலிருந்து.....




'பாதுகாவலன்' பத்திரிகையின் நீண்டகால வாசகன் என்ற வகையில் அண்மைக் காலத்தில் அதில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்களை எண்ணி பெருமிதம் கொள்கின்றேன். ஒரு கத்தோலிக்கபத்திரிகைதன்வரையறைக்குள் நின்று எந்த ளவு தூரம் பயணிக்க முடியுமோ அந்தளவுதூரத்துக்குதன்உருவஉள்ளடக்கங்களைவிசாலித்து மிகச் சிறப்பான முறையில் பாதுகாவலன் பத்திரிகை அண்மைக்காலத்தில் வெளிவர ஆரம்பித்திருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. இந்த முன்னேற்றத்தை நோக்கிய பாதையில் அயராது உழைக்கின்ற பத்திரிகையின் ஆசிரியருக்கு மனம் நிறந்த பாராட்டுக்கள். அண்மைக்காலமாக மடல் எழுதி வாழ்த்த எண்ணியிருந்த போதிலும் நினைப்பதை நிறைவேற்ற முடியவில்லை. எனினும் கடந்த உயிர்த்த ஞாயிறு தினத்தில் இலங்கைத் திருச்சபை வரலாற்றில் என்றுமில்லாதவாறு எதிர்கொண்ட பேரனர்த்தத்திற்குப் பின்னர் பாதுகாவலன் பத்திரிகை இதனை என்படி பதிவு செய்யப்போகின்றது என்ற எதிர்பார்ப்புடன் காத்திருந்தேன். பத்திரிகையைக் கண்டவுடன் துயரத்திற்கு மத்தியிலும் மகிழ்ச்சியும் நிறைவும் அடைந்தேன். அதன் விளைவுதான் இந்த மடல். கடந்த 05.05.2019 திகதியிட்டு வெளிவந்த பாதுகாவலன் பத்திரிகையில் வழமையான விடயங்கள் எல்லாவற்றையும் நிறுத்தி விட்டு பேரனர்த்தம் தொடர்பான பதிவுகளுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது சிறப்பிற்குரியயது. இந்த நேரத்தில் எமது மக்களுக்கு குறிப்பாக கத்தோலிக்க மக்களுக்கு எந்தச் செய்தியை வழங்க வேண்டுமோ அதனை இந்த இதழில் இடம்பெற்றிருந்த அனைத்து ஆக்கங்களும் வெளிப்படுத்தியிருந்தன.

குறிப்பாக ஆசிரிய தலையங்கம், நடுப்பக்கத்தில் இடம்பெற்றிருந்த கலந்துரையாடலின் தொகுப்பு என்பவை விசேட கவனிப்புக்குரியன. அன்புராசா அடிகளாரின் 'என் கேள்விக்கென்ன பதில்' கூட இந்த விடயம் தொடர்பாகவே அலசப்பட்டிருந்தமை சிறப்புக்குரியது . ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் விரிவாக எழுதவே விருப்பம். எனினும் நீண்டு விடும் என்பதால் அதனைத் தவிர்த்துள்ளேன்.

நிறைவாக இரு கருத்துக்கள் : இறுதிப்பக்க புகைப்பட பதிவும் அதற்கான தலைப்பு, கவிதை என்பனவும் உணர்வுபூர்வமாக இருந்தன. ஆனால் இந்த உணர்வுத் தொற்றலை முன்பக்கம் தராமல் போனது சற்று ஏமாற்றமாக இருந்தது. வழமையாக வர்ணத்தில் வெளி-வரும் பாதுகாவன் பெயர் இம்முறை கறுப்பு வர்ணத்தில் துக்கத்தை வெளிப்படுத்தும் முகமாக இடம்பெற்றிருந்த போதிலும் தாக்குதல் சம்பவம் தொடர்பான தலைப்புச் செய்தி இன்றும் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கலாம் என்பது என் தாழ்மையான கருத்து. 'பாதுகாவலன்' இதே வேகத்துடன் தொடர்ந்து வலம்வர வாழ்த்துகின்றேன்

நன்றி -

– எஸ்.ஜெனிஸ்ரன்

# சறா நீ தமிழினவழிப்பின் ஒரு குறியீடு

முத்தான பிள்ளையாய் உன் குடும்பத்தில் வாழ்ந்தாய்.
அன்பான பெற்றோர் பாசமான சகோதரங்கள், உறவினர்,
நண்பரென உனது உறவு வட்டம் அகலித்தது.
ஆனால் உம் இதயத்தின் அன்பின் விசாலிப்பு
இத்துடன் அடங்கத்தயாராகவில்லை.
எல்லைகள் கடந்த இறைவனைத் தேடினாய் உன் கரம் உயர்ந்தது
இறைகரம் அணைத்தது.
நீ குருவானாய்.
இருகரம் விரித்தாய் இறைமக்களை அணைத்தாய்.
உன் அருள்பணியில் இறைகுலம் நனைந்தது.
குருக்களின் தோழமையில் மகிழும்போது நீ ஒரு குழந்தை.
அவர்களுக்கு உதவுவதில் உயிர் கொடுக்கும் தோழன்.
வாழ்வதற்கு நீ ஒரு காரணம் வைத்திருந்தாய் அது அன்பு.
நீ சாவதற்கும் அதுவே காரணமானதுதான்
கிறிஸ்தவத்தின் முரண் உண்மை.
"தன் உயிரைக் காத்துக் கொள்ள விரும்புகிறவன் அதை இழந்து
விடுவான் அதனை இழப்பவனோ அதைக் காத்துக் கொள்வான்".
"தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு வேறில்லை".
"கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால்தான்
மிகுந்த பலனளிக்கும்"
இவையும் இவை போன்ற எத்தனையோ இறைவார்த்தைக்கும் உன்
வாழ்வும் அதன் முடிவும் சாட்சியமானதற்கு நாங்கள் சாட்சிகள்.
ஆயர் அழைத்தபோதும் அன்போடு மறுத்து மக்களோடு
நின்ற மனப்பாங்கில் நல்லாயன் இயேசுவை நீ எம் கண்முன்
காட்டவில்லையா?
"சரா பாதர்" என்று நீ பணியாற்றிய பங்குமக்கள் இன்றும் அன்பொழுக
நினைக்கையிலே உன் பணியின் ஆழம் எமக்குப் புரிகிறது.
சிலுவை சுமப்பின் முடிவில் சுகமாக வருவாய் என நினைத்திருந்தோம்.
ஆனால் அதற்கு நீ சீரேனே ஊர் சீமோன் அல்லவே.
இயேசுவின் பதிலாளாய் உன் சிலுவை சுமப்பு கல்வாரியில்
முடிவதுதான் சிறப்பு என்ற கடவுள் திட்டம்
எமக்குப் புரியக் காலமெடுத்தது உண்மைதான்.
உன் அசையும் தலையை அதிசயமாய் பார்த்ததுண்டு
ஆனால் அது "சம்மதமே இறைவா" என்று
அன்னை மரியைப்போன்று எப்போதும்
இறைச்சித்தத்துக்கு ஆமென அசைந்ததை
உன் சாவுதானே எமக்குணர்த்தியது.
ஒரு பெரும் இனவழிப்புப்போரின்
இறுதிப்புள்ளியிலே
உன் இதயத்துடிப்பை நிறுத்தினாய்.
உன் வாழ்வை தமிழினவழிப்பின்
ஒரு குறியீடாய் உயர்த்தினாய்.
இனி உன்னை எண்ணும் போதெல்லாம்
தமிழினவழிப்பை எண்ணுவோம்
தமிழினவழிப்பைப்பற்றி பேசும்போதெல்லாம்
உன்னைப்பற்றியும் பேசுவோம்.



சறா! பத்தாண்டுகளா பறந்தது
இன்னும் பக்கமே இருப்பதாக
ஒரு உணர்வு
பண்பான மொழி
பாசமான தொனி
பணியில் ஒரு தாகம்

தேச விடுதலை மீது
தீராத மோகம்
உறங்கும் விழிகளுக்குள்ளும்
உறங்க மறுக்கும்
இறையாட்சிக் கனவு
மொத்தத்தில்
இறைவனின் படைப்பில்
நீ ஒரு
அற்புதக்கலைவை

நல்லதுக்குக் காலமில்லை என்பார்கள்
அதனால்தானோ
முள்ளிவாய்க்கால்
முடிவில்
உன்னை இழந்தோம்
நீ
நேசித்த எமது
தலைமையை
இழந்தோம்
தன்னிகரில்லாத்
தானையை இழந்தோம்
தலைமுறைகளின்
தவத்தை இழந்தோம்

அழிவதற்கென்றே
ஆக்கப்பட்ட இனமா எம்மினம்?

சிலுவை சுமப்பின் முடிவு
கல்வாரியல்ல
இது
எமது நம்பிகையின்
அரிச்சுவடி

கல்வாரி கடப்போம்
கல்லறை திறப்போம்

அதுவரை காத்திரு
செபித்திரு
ஆண்டவன் திருவடியில்

**ம.வி.இ.இரவிச்சந்திரன்**

# கிறிஸ்தவமல்லா சமயங்களைப் பின்பற்றும்....

(3ம் பக்கத் தொடர்ச்சி)
இனம், நிறம், வாழ்க்கை நிலை, சமயம் ஆகியவற்றின் அடிப் படையில் எம்மனிதரையும் பிரித்து வேறுபடுத்துவதும், அவர்களைத் துன்புறுத்துவதும் கிறிஸ்துவின் போதனைக்கு முரணானவை எனத் திருச்சபை கண்டிக்கிறது. ஆகவே, திருத்தூதர்களான தூய பேதுரு, பவுல் ஆகியோரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி கிறிஸ்தவர் "பிற இனத்தினர் நடுவில் நன்னடத்தை உடையவராய் இருக்க" (1 பேது 2:12) வேண்டும் எனவும், உண்மையிலேயே விண்ணகத் தந்தையின் மக்களாகத் தாங்கள் இருக்கும்படி, தங்களால் முடிந்த வரை எல்லாரோடும் அமைதியுடன் வாழ வேண்டும் எனவும் திரு அவை விரும்புகிறது.

**கடவுள் யாவற்றையும் கிறிஸ்துவில் ஒப்புரவாக்கினார்**

எனினும், உண்மையிலே "வழியும் உண்மையும் வாழ்வும் நானே" (யோவா 14:6) ஆகிய கிறிஸ்துவைத்தான் அது அறிவிக்கின்றது, இடையறாது அறிவிக்கவும் வேண்டும். ஏனெனில் அவரிடத்தில்தான் மக்கள் சமய வாழ்வின் முழுமையைக் காண்கின்றனர். அவரிடத்தில்தான் கடவுள் யாவற்றையும் தம்மோடு மீண்டும் ஒப்புரவாக்கினார்.

(கிறிஸ்தவமல்லாத சமயங்களுடனான உறவு பற்றிய வத்திக்கான் சங்க ஏட்டை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது.)

# தமிழின அழிப்பின் நினைவாக



## மே 18 அன்று

## 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' உண்போம்!

நீண்ட இனவழிப்புப் போரின் இறுதிக் கட்டத்தில் எம் தமிழ்மக்கள் குறுகிய நிலப்பரப்பில் முடக்கப்பட்டார்கள். செல் மழையும், துப்பாக்கிச்சூடும், விமானக்குண்டுத் தாக்குதல்களும் கொத்துக்கொத்தாய்க் கொன்றொழித்துக் கொண்டிருக்க உணவும் மருந்தும் ஆயுதமாக்கப்பட்ட நிலையில் உண்பதற்கு எதுவுமின்றி நாட்கணக்காகப் பட்டினி கிடந்து பதுங்கு குழி மக்களாக அவலப்பட்டார்கள். இந்நிலையில் அவர்களின் உயிர்காத்தது போராளிகள் வழங்கிய கஞ்சிதான். மாத்தளன், வலைஞர் மடம், முள்ளிவாய்க்கால் என அவலப் பயணம் நகர்ந்தபோது பணக்காரன் ஏழை, படித்தவன் படிக்காதவன் என்ற எந்த வேறுபாடுமின்றி அவர்களின் உயிர்காத்த இடங்கள்தான் கஞ்சிக்கொட்டில்கள். ஆரம்பத்தில் பச்சையரிசி, சிறிதளவு பால், சீனி என்பன சேர்த்துத் தயாரிக்கப்பட்ட இக்கஞ்சி நாளடைவில் வெறும் அரிசியும் உப்பும் கலந்த உப்புக்கஞ்சியாயிற்று.

இவ்வாறு லட்சக்கணக்கான மக்களின் உயிர்காத்த இந்தக் கஞ்சியை 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' என்ற பெயருடன் அந்தமாபெரும்அவலத்தின்நினைவைவருடாந்தம்உயிர்ப்பிக்கும் உணவாக்கி எமது சந்ததிக்குக் கடத்த உலகத்தமிழர் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம். எவ்வாறு யூதர்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து புறப்பட்டபோது உண்ட பயண உணவை வருடாந்தம் உண்டு தம் நினைவுகளைத் தக்கவைத்து தாயகமாம் சீயோனுக்குத் திரும்பினார்களோ அதுபோல எம்மினத்தின் வீரமும் அவலமும் நிறைந்த ஒரு வரலாற்றுக் கட்டத்தை எம்மினத்தின் தேசிய இருப்பைத் தக்கவைக்கும் நினைவாக உயிர்ப்புடன் பேண வருடாந்தம் தமிழினவழிப்பு நினைவு நாளாகிய மே18 இல் 'முள்ளிவாய்க்கால் கஞ்சியை' உணர்வுமிகு உணவாக்குவோம்.

ஆகவே **உலகெங்கும் வாழ் தமிழ் உறவுகளே!**

- **அன்றைய நாளில் எமது வீடுகளில் 'முள்ளி வாய்க்கால் கஞ்சியை' ஒரு நேர உணவாக்குவோம். அதை உண்ணும் போது எமது தேசத்தின் வரலாற்றை எமது பிள்ளைகளுக்கு விளக்கி நினைவுகளை அடுத்த சந்ததிக்குக் கடத்துவோம்!**
- **ஆலயங்களிலும் பொது இடங்களிலும் கஞ்சிக் கொட்டில் அமைத்து 'முள்ளிவாய்க்கால் கஞ்சியை' அனைவருக்கும் வழங்கி உணர்வுளைப் பகிர்ந்து கொள்வோம்!**

நினைவுகளின் நீட்சியே தமிழினவழிப்பின் சாட்சி, இச்சாட்சியேஎம்மக்களுக்கானமீட்சியின்வழியெனஉணர்ந்து உணர்வுபூர்வமாகஇந்தநினைவேந்தலைமுன்னெடுப்போம். இனவழிப்பின் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்ட உணவையே நினைவேந்தலின் வடிவமாக்குவோம் மே 18 இல் முள்ளிவாய்க்கால் கஞ்சி உண்போம்!

**தமிழ் சிவில் சமூக அமையம்**
**முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்**
**பொதுக்கட்டமைப்பு (வடக்குக் கிழக்கு)**

## விண்ணக பிறப்பின் 20ம் ஆண்டு / விண்ணக பிறப்பின் 19ம் ஆண்டு



**அந்தோனி சவிரிமுத்து**
**பிறப்பு : 07.06.1922**
**இறப்பு : 22.05.1999**



**சவிரிமுத்து ஞானப்பு**
**பிறப்பு : 14.06.1926**
**இறப்பு : 02.07.2000**

பூவுலகு தனிலே எம்மை ஈன்று
பூவாக எம்மை வளர்த்த
அப்பாவே! அம்மாவே!
எம்மை விட்டு எங்குதான் சென்றீரோ
வருடங்கள் கடந்திடினும்
உம் நினைவுகள் எம்மை விட்டு மாறாது
காலத்தால் அழியாத உங்கள் அன்பும் பாசமும்
ஆறாக ஊற்றெடுக்கின்றது.
ஆறுதல் கூறிட யாரும் இன்றித் தவிக்கின்றோம்
ஆண்டவர் அடியில் இளைப்பாறிடுவீர்.

இவர்கள் நினைவாக வருகின்ற 22.05.2019 புதன்கிழமை அன்று வலைஞர்மடம் புனித செபமாலை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

தகவல் : பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

AD 36

## 3ம் மாத நினைவு

மலர்வு 29 . 10 . 1949



மறைவு 25 . 02 . 2019

அமரர்
**பாக்கியநாதர் மரிய யுலேக்கா**

**நித்திய இளைப்பாற்றியை உமது அடியாள் மரிய யுலேக்காவிற்கு அளித்தருளும் ஆண்டவரே! முடிவில்லாத ஒளி இவளின் ஆன்மா மேல் ஒளிர்வதாக. சமாதானத்தில் இளைப்பாறுவாராக**

**ஆமென்.**

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 25.05.2019 சனிக்கிழமை காலை 5.45 மணிக்கு பரிசுத்த புதுமை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

அன்புடன் நினைவு கூரும்
சகோதரரும், குடும்பத்தினரும்.

AD37

## நித்திய வாழ்வில் 10 வருடங்களும் 70 வது பிறந்த தின நினைவுகளும்

மண்ணக வாழ்வு 21 . 11 . 1949



விண்ணக வாழ்வு 19 . 05 . 2009

"சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்"

**அமரர் சிங்கராயர் றொகேஷன் பேணாட் மதுரநாயகம்**

(ஓய்வுநிலை பிரதம முகாமைத்துவ உதவியாளர், கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்)

எங்கள் அன்புள்ள அப்பா
நீங்கள் இல்லாமல் பத்து ஆண்டுகளா?
நம்ப முடியாமல் தவிக்கின்றோம் - அப்பா
உங்கள் பழைய கதைகளும்
சிரிக்க வைக்கும் பேச்சும்
ஊட்டி வளர்த்த பண்புகளும்
வாழ்நாள் முழுவதும் மறக்காது - அப்பா
எழுபது வயது பிறந்தநாளைக் கொண்டாட
பேரப் பிள்ளைகள் தேடுகிறார்கள் தாத்தாவை
பதில் சொல்லத் தெரியாமல் கலங்குகின்றோம் -
அப்பா
கனமான நாட்கள் எல்லாம் பஞ்சாய்
கடந்தன உங்களுடன் - அப்பா
இப்போ நாட்கள் கழிய மறுக்கின்றன
நீங்கள் இல்லாமல் - அப்பா
தெய்வத்துள் தெய்வமாய் உறைந்துள்ளீர்கள்
என்ற நம்பிக்கையுடன்
"மெல்லுகோஷ்" வழியில் நாமும் பயணிக்கிறோம் - அப்பா

அச்சக வீதி,
யாழ்ப்பாணம்

AD 35

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## இரணைதீவு, இரணைமாதா நகரில் திருநிலைப்படுத்தல் நிகழ்வு



முழங்காவில் பங்கிற்குட்பட்ட இரணைதீவு, இரணை மாதா நகர் புனித செபமாலைமாதா ஆலயத்தைச் சேர்ந்த அந்தோனிமுத்து கீதபொன்கலன் - ஆகத்தம்மா தம்பதிகளின் புதல்வன் அன்ரன் கொண்சலஸ் அவர்கள் இரத்தினபுரி மறைமாவட்டத்தில் இணைந்து தனது குருத்துவப் பயிற்சியைப் பெற்று மே மாதம் 28ம் திகதி காலை 9.00 மணிக்கு அருட்சகோதரனின் சொந்த ஊரான இரணைமாதா நகர் புனித செபமாலை மாதா ஆலயத்திலேயே இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கிளிற்ரஸ் C. பெரேரா (O.S.B) ஆண்டகை அவர்களால் திரு நிலைப்படுத்தப் படவுள்ளார். இவரின் முதல் திருப்பலி மறுநாள் மே 29ம் திகதி அதே ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். யாழ். மறைமாவட்ட ஆயர் சார்பாக குருமுதல்வர் அருட் கலாநிதி ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார் இக் குருப்பட்ட நிகழ்வில் கலந்து கொள்வார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிறிஸ்தவர்களிடம் மன்னிப்புக் கேட்கும் இஸ்லாமியர்



இலங்கையில் நடைபெற்ற தாக்குதல்களுக்காக, இஸ்லாமிய சமுதாயத்தின் சார்பில் மன்னிப்பை விழைந்து, மே 14, இச்செவ்வாயன்று, இஸ்லாமிய கிறிஸ்தவ செய்தியாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

ஏப்ரல் 21, உயிர்ப்பு ஞாயிறன்று இலங்கையில் தாக்குதல்களில் ஈடுபட்டவர்கள், மதமோ, நம்பிக்கையோ அற்றவர்கள் என்றும், அதனால், அவர்களது இறந்த உடல்கள், இஸ்லாமிய கல்லறைகளில் அடக்கம் செய்யப்படவில்லை என்றும், அனைத்து இலங்கை ஜமியத்துல் உலாமா (All Ceylon Jamiyyathul Ulama) அமைப்பின் தலைவர், மௌலவி பரூத் பரூக் (Moulavi Farood Farook) அவர்கள் கூறியுள்ளார் என்று ஆசியச் செய்தி அறிவித்துள்ளது.

நடைபெற்ற தாக்குதல்களுக்கும், இஸ்லாமிய மத உணர்வை உண்மையாகக் கொண்டவர்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை, தலைவர் பரூக் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்.

2014ம் ஆண்டு, இஸ்லாமிய அரசு என்ற பெயரில், ISIS என்ற அமைப்பு உருவான வேளையில், அந்த அமைப்பிற்கும், இலங்கை இஸ்லாமியர்களுக்கும், எந்தத் தொடர்பும் இல்லை என்பதை, வெளிப்படையாக அறிவித்துள்ளோம் என்று, பரூக் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

## இரங்கல் பிரார்த்தனை



உயிர்ப்பு ஞாயிறு தினத்தன்று வெடிகுண்டுத் தாக்குதலில் இறந்தவர்களுக்காகவும், காயப்பட்டவர்களுக்காகவும், குடும்ப உறவுகளை இழந்து தவிப்பவர்களுக்குமாக இரங்கல் பிரார்த்தனையும் ஒளியேற்றல் அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் 14.05.2019 அன்று காலை 10.00 மணியளவில் கியூடெக் கரித்தாஸ் நிறுவன மண்டபத்தில் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குனர் தந்தை S.இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி.றொபின்சன், நான்கு மதத் தலைவர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், கிராம உத்தியோகத்தர்கள் சமாதானக் குழுவினர், சர்வமத சகவாழ்வு குழுவினர், இளையோர், கரித்தாஸ்-கியூடெக் நிறுவனப் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து "இக்காலகட்டத்தில் நாம் ஒவ்வொருவரும் பொறுமையுடனும், ஒற்றுமையுடனும் செயற்பட வேண்டுமென்றும் முஸ்லீம் மக்களின் பாதுகாப்பில் கிறிஸ்தவ சமூகம் அக்கறை கொண்டுள்ளதாகவும் பாதுகாப்பை உறுதி செய்வதாகவும்" இயக்குநர் தந்தை கூறினார். இந்து மதத் தலைவர் பேசுகையில் அனைத்து மதத்தவர்களும் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் இருக்க வேண்டுமென்றும் மதத்தலைவர்கள் மக்களை சரியான வழியில் வழிநடத்த வேண்டுமென்றும் கூறினார். இஸ்லாம் மதத் தலைவர் கூறுகையில் இவ்வன்முறைச் சம்பவத்தை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும், இக்கொடூர சம்பவத்திற்கு இஸ்லாம் மதத்தில் எந்த இடமும் கிடையாது என்றும் இச்செயலில் ஈடுபட்டவர்கள் இறைவனின் சட்டத்திற்கு எதிரானவர்கள் என்றும் கூறினார். இந்நிகழ்வானது சர்வமதத்தினரும் ஒன்றிணைந்த மனப் பகிர்வுடன் நிறைவுற்றது.

## உரும்பிராயிலும் இரங்கல் வழிபாடு



கடந்த 21ம் திகதி நடைபெற்ற அனர்த்தத்தில் இறந்த அனைவருக்கும் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் சர்வ மத வழிபாடு 5ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை இடம்பெற்றது இவ் வழிபாட்டில் சர்வமதத் தலைவர்கள், இறைமக்கள் இணைந்து இரங்கல் வழிபாட்டை நடாத்தினர். இறந்தோர் நினைவாக உரும்பிராய்ப்பங்குத் தந்தை அருட்பணி. எம். பத்திநாதர் இறந்தோர் நினைவாக பாஸ்காத்திரி ஏற்றுவதைப் படத்தில் காணலாம்.

## புதிய பங்கு சிலாவத்தை



இதுவரை காலமும் முல்லைத்தீவுப் பங்குக்கு உட்பட்டதாக இருந்த சிலாவத்தை, வற்றாப்பளை, கேப்பாபுலவு, தியோகு நகர் ஆகிய துணைப்பங்குகள் நான்கையும் தனியாக சிலாவத்தை பங்காக யாழ். ஆயர் அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்.

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரான்சிஸ்கன், கப்பூச்சீன் சபையினர் இப்பங்கைப் பொறுப்பெடுத்துள்ளார்கள். இச்சபையைச் சேர்ந்த அருட்தந்தையர்கள் அலெக்ஸ், சவேரியார் ஆகிய இருவரும் இப்புதிய பங்கின் பங்குத்தந்தை, உதவிப் பங்குத்தந்தையர்களாகப் பணியாற்றுவார்கள்.

யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அவர்களால் அண்மையில் இப்புதிய பங்கு ஏற்படுத்தப்படும் நிகழ்வு நடைபெற்றது.

## "பாதுகாவலன்" வாசிப்பதில், இரணை மாநகர் பங்கு மக்கள் முன்னிலையில்

யாழ் மறைமாவட்ட உத்தியோக பூர்வ கத்தோலிக்க பத்திரிகையான "பாதுகாவலன்" பத்திரிகையை கூடிய எண்ணிக்கையில் பெற்று படிக்கின்ற வகையில் யாழ் மறைமாவட்டத்தின் இரணைமாதா நகர்ப் பங்கு முதன்மை பெறுகின்றது. முந்நூறுக்கும் அதிகமான பத்திரிகைகளைப் பெற்று பங்கு மக்கள் படித்துப் பலன் பெறுகின்றனர். இவ் பத்திரிகை விநியோகத்தில் பெரும்பணியாற்றும் பங்குத்தந்தை அருட்பணி அருட்செல்வன் அடிகளாருக்கும், மரியாயின் சேனையினருக்கும் வாழ்த்துக்களும் நன்றிகளும்.

## புதியதோர் போர்க்களம்









படங்கள் : ஆனையூரான்

இலங்கைக் கல்வியில்
புரட்சி வருமென்று இருந்தோம்
வந்ததோ
குண்டுப்புரளி

துப்பாக்கி முனையில்
கொள்ளைக்
காலம் போய்
கல்வி என்றானதோ?

புத்தகப்பைகளின்
பரிசுத்த தனமும்
பள்ளிச்சீருடையின்
கபடற்ற இயங்கியலும்
நிர்வாணமாய்
நிறைந்து வழிகின்றது
(பள்ளி) வாசல்களில்

சங்க காலத்தில்
போர்க்களம் இணைக்கச் செல்லும்
பெற்றோர் போல்
பிள்ளைகள் கையில்

காக்கிச் சீருடைக் கருவிதாரிகளின்
திகில் பிரசன்னம்
எலி வேட்டையறியாத
பூனைகளாய் நிற்கும்
குழந்தைகளின் அப்பாவித்தனம்
சோதனைச் சாவடிகளில்
பணியமர்த்தப்படும்
பெற்றோர் படைப்பிரிவு
வேதனை தான்

எங்கே செல்லும்
இந்தப் பாதை ....? (கல்வி)

- செல்வன்

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2019ம் ஆண்டு வைகாசி மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.